# ஜெஸ்ஸி ஜேம்ஸ்!





அடுத்த காமெடி ஸ்பெஷல்!
அதிரடி அண்ணன்!
லயன் காமிக்ஸ்
ரூ. 6/=
முழு நீள
முழு வண்ணக் கார்ட்டூன்!




# ஹாட்-லைன்

வாசக நண்பர்களே,

நீண்ட நாட்களுக்குப் பிறகு காமெடி கௌ-பாய் லக்கி லூக் ஒரு முழுநீள சாகஸத்துடன் உங்களை சந்திக்க வந்துள்ளார்! உலக மெங்கும் பல்வேறு மொழிகளில் அச்சாகும் லக்கி லூக் கதைகளை (ஏற்கனவே அறிவித்திருந்தது போல) அடிக்கடி நமது லயனில் வெளியிட எண்ணியுள்ளேன்! உங்களுக்கும் ஓ.கே. தானே?!

லக்கி லூக் கதைகள் என்றாலே கண்டிப்பாக முழு வண்ணத்தில் தான் இருக்க வேண்டுமென்று வாசகர்கள் மட்டுமல்லாது - சில விற்பனையாள நண்பர்கள் கூட வலியுறுத்தியுள்ளனர்! ஆகையால் சற்றே கூடுதல் விலையோடு முழு வண்ணத்தில் வெளியிட்டுள் ளோம். கதை - வசனங்கள் - வண்ணங்கள் - பற்றிய உங்கள் விமர்சனங்களை ஆவலோடு எதிர்பார்க்கிறேன்!

"லயன் காமெடி ஸ்பெஷல்" வரிசையில் மேலும் சில சர்வ தேச கார்டூன் கேரக்டர்களை அறிமுகப்படுத்த முயற்சிகள் நடந்து வருகின்றன! ஓரிரு மாதங்களில் வரவிருக்கும் நகைச்சுவை நாயகர்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன்!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்!

அன்புடன்,

ஆசிரியர்.



*விரைவில்... உங்களை சிலிர்க்கச் செய்ய வருகிறது!*

## லயன் தீபாவளி ஸ்பெஷல்!

# XIII-ன்

# இரத்தப் படலம்-V



லயன் காமிக்ஸ்





# லக்கி லூக்

# VS

# ஜெஸ்ஸி ஜேம்ஸ்

*கதை:* கோஸ்ஸினி

*சித்திரங்கள்:* மோரிஸ்

*தமிழில் மொழிபெயர்ப்பு:* S. விஜயன்




ஜெஸ்ஸி ஜேம்ஸ்!
இதோ வந்து கொண்டிருக்கும் இந்தக் குதிரை வீரனைப் பாருங்கள்! துப்பாக்கியைக் கையாளுவதில் அசகாய சூரன் இவன்!
டுமீல்!
குதிரை விடுவதிலும் பலே கில்லாடி!
நீங்கள் ஈசி சேரில் எத்தனை சொகுசாக இருப்பீர்களோ - அத்தனை சொகுசாக குதிரை மீது இவன் பொழுதைப் போக்குவான்!
அவனது குதிரையும் சாமான்யப் பட்டதல்ல!


இணைபிரியா நண்பனாக - கலங்கா கர்ம வீரனாக தன் பணியை ஆற்றுவதில் ஜாலி ஜம்பர் படுகெட்டி!
உப்!
சே.. தீப்பெட்டி நனைஞ் சிட்டுதே!
ஏராளமான விதங்களில் உதவி செய்வது ஜாலிக்குப் பொழுது போக்கு!
அதை முடிச்சிட்டு அந்தக் கேனை உடைச்சு பீன்ஸ் குழம்பு வைக்கறியா?
தடயமின்றிப் பயணம் செய்ய எத்தனை வழி உண்டோ அத்தனையும் ஜாலிக்கு அத்துப்படி!
சபாஷ் ஜாலி! ஒரு பயல் நம்மைப் பின்தொடர முடி யாது!
எப்போதாவது ஜாலிக்கும் எரிச்சல் வந்து முணு முணுப்பது உண்டுதான!
78, 79, 80..! என்ன சொன்னாலும், நூறுக்கு மேலே நம்மால முடியா துப்பா!



யாருக்கும் - எப்போதும் உதவும் இவனது குணத்தைப் பாரீர்!
என்னாச்சுடா அரை டிக்கெட்?
ஆஆஆஆ
அந்தத் தடியன் என் பிஸ்கெட்டை பறிச்சுட்டான்!
ஒரு நொடி பொறு...
ஆஆஆ!
சாப்பாடு முடிஞ்சப்புறம் தான் ஜெயில்லேர்ந்து வருவேன்னு இந்தத் தடி மாடு அடம் பிடிச்சப்பவே எனக்குத் தெரியும் - இப்படி நடக்கும்னு!
ஆஆ.. எனக்கு ஒரே பசிப்பா!
ஜெயில்லேர்ந்து தப்பிச்சது தப்பு!
அப்புறமும் இரண்டு தடவை சமையல் கட்டுக்குப் போயிட்டு தான் வந்தான்!
அநீதியை அறவே அழிக்கும் அதிரடி வீரன் இவன்!
ஒரே சீட்டுக்கட்டிலேர்ந்து அஞ்சு குயின் வந்தப்பவே என்னமோ இடிக்குதேன்னு நினைச்சேன்!
பணத்தை திருப்பி அவரிடம் கொடுடா ராஸ்கல்!
பயம் என்பது இவன் அகராதியிலேயே கிடையாது!
லா.. லா.. லா..! ஒட்டகத்தைக் கட்டிக்கோ..!
லக்கி.. இன்னைக்கோட உன் கதை முடிஞ்சது! உன்னை சல்லடையாக்கப் போறேன்!
அசாத்திய வீரமும் -
கெட்டியாக ஒட்டிக்கோ..
நான் சொல்றது காதிலே விழலை..? என்னமாவது செய்டா சனியனே!
நீதிக்குத் தலை வணங்கும் நெஞ்சமும்...
..கொண்ட இந்த மனிதன் -இந்த லக்கி லூக் தான் நமது ஹீரோ!
யம்மமா...! நான் என்ன தான் பண்றது? பயல் திரும்பக் கூட மாட்டேன்கிறான் பாட்டையும் நிறுத்தலை!
தனிமையே என் துணைவன்... தனிமையே என் வாழ்க்கை...!
என்னப்பா இது..? கதை முடியறப்போ பாட வேண்டிய பாட்டை இப்பவே பாடுறார்? சின்னக் கதையா இருக்குமோ?


இதோ ஜாலியாகப் புஸ்தகம் படித்துக் கொண்டிருக்கும் இந்த ஆசாமியைப் பாருங்கள்! இவன்தான் நமது கதையின் வில்லன் "ஜெஸ்ஸி" ஜேம்ஸ்! தனது பண்ணைப்புற வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறான்!
என்ன செய்வது என்பது பற்றித் தீர்மானம் எடுத்து விட்டேன்! நவீன கால 'ராபின்ஹூட்'டாக மாறப் போகிறேன்!
Robin
வரலாற்றில் பிரசித்திபெற்ற ராபின் ஹூட்டைப் போலவே தானும் ஒரு தாடி வளர்த்துக் கொண்டான் ஜெஸ்ஸி! அவனது அடுத்த தேவை தொப்பியில் வைக்க ஒரு இறக்கை மட்டுமே!
போச்சுடா சாமி!
ஹேய் மிஸ்டர்!
ரம்மி ஆட்டத்தில் என் காசு, குதிரை, சட்டை, பேண்ட் எல்லா வற்றையும் தோற்று விட்டேன்! கையில் காலணா கிடையாது! ஏதாவது உதவி பண்ணுங்களேன்...!
குதிரையில் என்னோடு ஏறிக்கோ!
நான்தான் புத்தம் புதிய ராபின் ஹூட்! ஒரிஜினல் ராபின் ஹூட் வசதியானவர்களிடம் திருடி ஏழைகளிடம் கொடுத்து வந்த ஒரு சோமாறி!
சரியான இளிச்ச வாயனே?
அப்போது -
லா-லா-லா... அருமையான விலைக்கு என் சரக்கையெல்லாம் விற்றுப் பணத்தை இரும்புப் பெட்டியில் வைத்துக் கொண்டு போகிறேன்! -லா..லா லா...!
உயிர் மேல் ஆசை யிருந்தால் பணத்தை இப்படிக் கொடு! ஏழைகளுக்காக நிதி திரட்டுகிறேன்!
இது எல்லாம் எனக்கா?
ஒரு நிமிஷத்திற்கு முன்னால் வரை ஓட்டாண்டியாக இருந்தேன் - இப்போது லட்சாதிபதி டோய்!


என்ன சொன்னே...?
அது - அது வந்து... நான் லட்சாதி பதின்னு சொன்னேன்!
ஓ.கே... பணமா -உயிரா - எது தேவை உனக்கு?
எ-என்னது?
ஆ-ஆனால் நான் இப்போ திரும்பவும் ஏழையா கிட்டேனே..!
பணத்தைப் பத்திரப் படுத்தக் கத்துக்கோ தம்பி!
வீட்டிற்குப் போன ஜெஸ்ஸி - தன் மன சாட்சியோடு ஒரு மல்யுத்தம் நடத்தினான்...!
வாவ்... இந்தப் பெட்டியில் எக்கச் சக்கமாய் பணம் இருக்கு! நாம் பணக்காரர் களாகி விட்டோம் ஜெஸ்ஸி!
எனக்குத் தெரியும் அண்ணா..! அது தான் என் மனசை உறுத்திக் கொண்டிருக்கு!
ஒரிஜினல் ராபின் ஹுட் வசதியானவர் களிடம் திருடி இல்லாதவர்களிடம் கொடுத் திருக்கிறான்!
ப்பூ... இதுதான் பிரச் சனையா? நான் ஏழையாக இருப்பதால் என்னிடம் பணத்தைக் கொடு! பணத்தை நீ எனக்குக் கொடுத்து விட்டால் அப்புறம் நீ ஏழையாக மாறி விடுவாய். உடனே நான் பணத்தை உனக்குத் தருகிறேன்! அப்புறம் பணக்காரனான நீ ஏழையான எனக்குத் தரவேண்டும். இப்படியே மாற்றி மற்றிக் கொடுத்துக் கொண்டேயிருந்தால் உன் கொள்கைக்கும் ஆபத்தில்லை- பணமும் நம்மிடையே இருக்கும்!
எப்படி என் ஐடியா?
பிராங்க் கண்ணா... பயங்கரமான கில்லாடி நீ!
இப்போது இந்த பிராங்க் பற்றிப் பார்ப்போம். ஜெஸ்ஸி, ''ராபின் ஹுட்'' பற்றிப் படித்துக் கொண்டிருந்த போது மூத்த சகோத ரனான பிராங்க் ஷேக்ஸ்பியர் பற்றி ஆழ்ந்து படித்தான்...!
...அவன் பேசும் போதெல்லாம் ஷேக்ஸ்பியரின் கவிதைகளையே மேற்கோள் காட்டுவான்!
இருப்பதா - மரிப்பதா - அதுதான் கேள்வி!


தன் இலட்சியத்திற்குத் துணை நிற்க ஒன்று விட்ட சகோதரனான கோலியைக் குழுவில் சேர்த்துக் கொண்டான் ஜெஸ்ஸி!
கோலி ஒரு விளையாட்டுப் பிள்ளை
டமால்
விறகினுள் டைனமைட் குச்சியை சொருகி வைத்த தடிமாடு நீதானு?
வெகு விரைவில் இந்த மூவரும் தங்கள் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தனர். வங்கிகள், ரயில்கள், கோச்சு வண்டிகள் என்று ஏகப்பட்ட கொள்ளைகளை நடத்தி அந்தப் பகுதி முழுவதும் பீதியை உண்டாக்கினர்...
ரயில் கொள்ளைகளின் போது ஜெஸ்ஸி விஷேசமானதொரு முறையைக் கையாண்டான்...
ரயில் வந்து கொண்டிருக்கிறது! இழு கோலி!
ஹோய்?
?
உங்களிடமிருக்கும் தங்கத்தைக் கொடுங்கள் - பசியால் வாடும் ஒரு குடும் பத்திற்கு உதவ வேண்டும்!
இப்படியாக ஜெஸ்ஸி ஒரு மாபெரும் அயோக்கியனாக மாறினான்...
இப்படிப்பட்டதொரு சமூக விரோதி நம்முடைய ஹீரோவின் வழியில் எப்படிக் குறுக்கிட்டான் என்பதை இனி பார்ப்போம்...
கதை ஆரம்பிச்சப்போ நம்ம படங்களைப் போட்டாங்க! அப்புறம் திடீர்னு மறந்திட் டாங்க! இப்போ திரும்பவும் நாம வரனுமா? நல்ல வேடிக்கைப்பா!


ஹேய் சின்னப் பையா!
?
லக்கி லூக் என்பரை எங்கே பார்க்க லாம்னு உனக்குத் தெரியுமா?
அவர் ஆத்துல குளிச்சிக் கிட்டிருக்கிறார்! உங்களுக்காக நான் போய் அவரிடம் சொல்கிறேன்!
லக்கிண்ணே! போலீஸ்காரங்க உங்களைப் பார்க்க வந்திருக்காங்க!
நான் ஜாலி ஜம்பரின் பிடரிக்கு ஷாம்பூ போட்டுக் கிட்டிருக்கேன்! முடிச்சிட்டு ஓட்டலில் வந்து அவர்களைச் சந்திப்பதாகப் போய்ச் சொல்லு!
நீங்கள் தானா?
HOTEL
மிஸ்டர் லூக், என் பெயர் ஸ்மித். இவர் ஜோன்ஸ்! நாங்கள் பிங்கர்டன் துப்பறியும் பிரிவைச் சேர்ந்தவர்கள். உங்களுடன் பேச வந்துள்ளோம்!
ம்ம்ம் என்னுடன் வாங்க!
அட.. போலீஸ் காரங்க...!


போலியான பெயரில் நாங்கள் இங்கு வந்துள்ளோம்! எங்களுடைய வேலையின் பின்னணியே ரகசியம்தான்!
அக் கு - அக் கு!
ஓஹோ!
நாங்கள் வந்த விஷயம் என்ன வென்றால்...
கிளிங்!
ஜெஸ்ஸி ஜேம்ஸின் அட்டகாசத் தால் மிஸோரி பகுதி மக்கள் ரொம்பவும் பீதியடைந்து போயிருக்கிறார்கள்! பாங்கு களைக் கூட நம்பமுடியாத நிலையில் உள்ளனர்...!
ஆகையால் பாங்குகளின் பிசினஸ் ரொம்ப பாதித்துள்ளது! அவனையும் அவனது கும்பலையும் பிடிக்கும் பணியை பாங்குகள் எங்களிடம் ஒப்படைத்துள்ளன!
ஆனால், எங்கள் ஆட்கள் வேலையில் இறங்கியவுடன் ஜெஸ்ஸி கும்பல் அவர்களை அடையாளம் கண்டு கொண்டு தப்பி விடுகின்றனர்!
எப்படித்தான் எங்கள் ஆட்களை அவர்களால் கண்டு பிடிக்க முடிகிறதோ- தெரியலை!
இப்போது மிஸோரி மாநிலத்தில் அவர்கள் மீது ஏராளமான கேஸ்கள் இருப்பதால் ஜெஸ்ஸியும் அவனுடைய ஆட்களும் டெக்சாஸ் நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர்...
...எனவே அந்தக் கும்பல் டெக்சாஸ் வந்தால் நீங்கள் அவர்களை விரட்டியடிக்க வேண்டும் என விரும்புகிறோம்!
ஓகே! இங்கு ஏதாவது தப்புத் தண்டா பண்ணினார் களானால் அவர்களை விரட்டியடிக்க வேண்டியது என் பொறுப்பு. ஆனால் அவர்கள் சட்ட விரோத மாய் எதுவும் செய்யாவிட்டால் அவர்கள் விவகாரத்தில் நான் தலையிட முடியாது!
ஓ.கே... ஓ.கே...! உங்கள் மீது நிறைய நம்பிக்கை உள்ளது! ஆனாலும் நாங்கள் யார் என்பதை மட்டும் யாரிடமும் சொல்லிவிட வேண்டாம்!


நாங்கள் இந்தப் பகுதியிலேயே தான் இருப்போம் மிஸ்டர் லூக்! அவர்களால் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால் எங்களுக்குத் தெரிவியுங்கள்!
அந்த அயோக் கியர்களை டெக்சாஸில் இருந்து விரட்டி யடியுங்கள்!
ஷெரீப் ஆபீசுக்குப் போவோம் ஜாலி!
குறுக்குப் பாதையில் போ... அவசரமாய் போகணும்!
உன்னை அப்புறமாய் ஓட்டலுக்கு வெளியே சந்திக்கிறேன்! சும்மா இருக்கிற நேரத்தில் லாடம் அடிக்கிறவனைப் போய் பார்த்து உன் இடது கால் ஷூவை மாத்தி வர்றியா?
அதுவும் சரிதான்!
ஷெரீப்! நகர மக்கள் எல்லாரையும் ஓட்டலுக்கு வர வழையுங்கள். மோசமான சேதி காத்திருக்கிறது!
மிஸ்டர்... நாங்கள் லாம் ரொம்ப தைரிய சாலிங்க...! லேசிலே பயந்திட மாட்டோம்!
தடியன் டாம்
ஜெஸ்ஸி ஜேம்ஸும் அவனுடைய கும்பலும் இந்தப் பக்கமாக வருவதை நான் சொல்ல வேண்டும்!
?!?
எ - என்னது
இப்படித் திடீர்னு நடுக்கம் கூடாது ஷெரீப்!



சற்றைக்கெல்லாம்
உங்கள் எல்லோருக்கும் ஜெஸ்ஸி ஜேம்ஸ் பற்றித் தெரிந்திருக்கும். எல்லாரை யும் மிரட்டி வைத்து, பணத்தை திருடிச் செல்வது அவ னது வாடிக்கை! அதே ஜெஸ்ஸி
ஜேம்ஸ் இந்தப் பக்கமாக வந்து கொண்டிருக்கிறானாம்! அவனைக் கண்டு பயப்படுகிறீர்களா?
லக்கி, அவன் நம்முடைய நத்திங் கல்ச் நகரை நோக்கித்தான் வருகிறான் என்று நிச்சயமாகத் தெரியுமா?
நோ. டெக்சாஸ் மிகப் பெரிய மாநிலம். அவன் எங்கேயும் போகலாம். ஆனால் -
அந்த அயோக்கி யனைக் கண்டு நான் பயப்படவில்லை!
அதேதான்! இது மிஸோரி மாநிலம் அல்ல!
நாங்கள் டெக்சாஸ் காரர்கள் - தொடை நடுங்கிகள் அல்ல!
அப்படியே அவன் இங்கு வந்தாலும், அவனால் இங்கு ரொம்ப காலம் குப்பை கொட்ட முடியாது!
சபாஷ்! நான் உங்களிடம் எதிர் பார்த்தது இதைத்தான்! அவன் இங்கு ஏதாவது பிரச்சனை பண்ணி னால் குண்டுக் கட்டாகத் தூக்கி டெக்சாஸுக்கு வெளியே எறிந்து விடுவோம்! இன்று டிரிங்க்ஸ் செலவு எல்லாமே என்னது!
யா-ஹோ!
அவர்கள் மட்டும் இங்கே வரட்டும்..
அப்புறம் தெரியும் சேதி!
ஐயோ! அம்மா!
பயப்படும்படியான காய மில்லை தம்பி! ஆனால் நான் சொல்வதைக் கேளு - துப் பாக்கியை இப்படி ஸ்டைலாக சுழற்றிச் சுடும் நினைப்பை விட்டுவிடு! நீயே உன் கையில் சுட்டுக் கொள்வது இது மூணாவது தபா!
போச்சு டாக்டர்.. ஒற்றைக் கை ஆசாமிகளை வைத்துத்தான் அந்த ரௌடிகளை நான் சமாளிக்கணுமா?


இதற்கிடையில் மூன்று குதிரை வீரர்கள் டெக்சாஸ் எல்லையினுள் நுழைந்தனர்...
TEXAS
நண்பர்களே, இது முதல் இந்தக் காட்டுப்பகுதிதான் நம்முடைய முகாம்! ஏழைகளின் கண்ணீரைத் துடைக்க பணக்கார முதலைகளை வேட்டையாடுவோம்!
வெல்!
அங்கே பாருங்க ஒரு ரயில் பாதை இருக்கு! ''ரயில் வண்டி'' விளையாட்டு ஆடுவோமா?
ஓ... தாராளமாய் விளையாடலாம் கோலி பையா! ரயிலைக் கொள்ளையடிப்பதென்றால் எனக்கும் கொள்ளை பிரியம்! ரயிலில் எல்லாத் தரப்பு மக்களையும் சந்திக்கலாம்! ஏழைகள்... பணக்காரர்கள்...!
நம் இலட்சியப் பயணம் இந்த மாநிலத்திலும் தொடரட்டும்!
ஹி! ஹி! நான் ரயிலைக் கவிழ்க்கவா..? நானே கவிழ்க்கவா?
செய் கோலி! நானும் பிராங்க்கும் போய் மறைந்து கொள்கிறோம்!
ம்ம்ம்... முதல்லே எஞ்சின் இருக்கு... அப்புறம் பிரயாணிகள் பெட்டி... அப்புறம் சரக்கு வண்டி. பத்து மைலுக்கு அப்பால் ரயில் வந்துக் கிட்டிருக்கு! எக்கச் சக்கமாய் நேரம் இருக்கு!
ஜெஸ்ஸியின் முறையில் இருந்து மாற்றிச் செய்யப் போகிறேன். பார்த்தால் ஜெஸ்ஸி சந்தோஷப்படுவார்!


தண்டவாளத்தின் ஒரு பக்கத்து போல்ட்டுகளை மட்டும் கழற்றுவ தற்குப் பதிலாக இரண்டு பக்க போல்ட்களையும் கழற்றிட்டேனே!
இனி வண்டி வர்றவரை காத்திருக்கணும்! அதோ வருது ரயில்!
சற்றே தள்ளி -
ஆனால் ஜெஸ்ஸி, நாம் ஏன் குதிரைகள் மீது அமர்ந்து காத்திருக்கக் கூடாது? குரங்கு மாதிரி மரத்திலே தான் ஒளியணுமா?
அந்தக் காலத்தில் இப்படித்தான் ராபின் ஹூட் செய்தாராம்! நாமும் அப்படித் தான் செய்யணும்!
தாயைப் போல பறவைக் குஞ்சும் செய்யும். (மேக்பெத் ஆக்ட் 2, செக். 2)
பேசாம இரு! ரயில் வந்து கொண்டிருக்கு!
யாஹோ!!
ஹேய், இங்கே வேறு ஏதாவது ஒரு ரயில் பாதை இருக்கா?
இல்லியே..
அப்படியானால் இது ரயிலைக் கொள்ளையடிக்க நடக்கும் வேலை! நன்றாகப் பிடித்துக் கொள்! நான் வண்டியை விரட்டப் போகிறேன்!


கிளம்பலாம்! கீழே குதி!
ஆ - ஆனால் ஜெஸ், எனக்கு கீழே குதிப்பதுனுலே பயங்கிறது தெரியுமே...
என்ன செய்து தொலைத்தாய் கோமுட்டித் தலையா?
உஷ்? ???
உங்க டெக்னிக்கை கொஞ்சூண்டு மாற்றிப் பார்க்க நினைச்சேன்! அதனுலே தண்டவாளங்களின் இரண்டு பக்க போல்ட்களையும் கழற்றி, இரண்டையும் வெளியே இழுத்தேன்! ரயில் நிக்காம ஓடும்னு எனக்கு எப்படித் தெரியும்?
ரயில் பள்ளத்தாக்கை நோக்கிப் போகிறது. இனி அதை விரட்டிப் பிடிக்க முடியாது! ஹ்ம்ம்ம்... போனால் போகட்டும் போடா!
ஸ்டாப்! ஸ்டாப்!
அச்சச்சோ ரயில் இப்படிக் குதிக்குதே!
ஹோல்டான்!
பிரேக் போடு! பிரேக்கை இழு!
இறக்கத்தில் ஓடும் போது பிரேக் போடுவதா? உனக்கென்ன மறை கழன்றிடுச்சா?
அடச்சே..! இந்த ரயில் பெட்டிலே நான் சவாரி செய்யறது இதுதான் கடைசி தடவை!
சமவெளிப் பகுதிக்கு வந்துட்டோம்! அதோ வலது புறம் ஒரு டவுன் இருக்கு பாரு!
அது நத்திங் கல்ச் நகரம்! பயல்கள் அத்தனை பேரும் ஆடிப்போயிடு வானுக பார்!


SALOO
கிறீச்!
எக்ஸ்க்யூஸ் மீ ஜென்டில் மென்! எனது ரயில் 'பிரேக் டவுண்' ஆகி வெளியே நிக்குது! திரும்பவும் சரியான பாதைக்குப் போய்ச் சேர யாராச்சும் ஒத்தாசை பண்ண முடியுமா?
நத்திங் கல்ச் வழியாக ரயில் வருதா? அப்படியானால் நிலத்தின் விலை எக்குத்தப்பாய் அதிகரித்துவிடுமே!
போய்ப் பார்ப்போம்!
இந்த விடியா மூஞ்சி ஊருக்கெல்லாம் வந்து ரயில் நிற்கலைன்னு யார் அழுதா?
மேடம்! டிபன் சாப்பி டறதுக்காக ரயிலை இங்கே நிறுத்தி யுள்ளோம்!
எங்களுக்கு பசிச்சதுன்னா ரயி லினுள் இருக்கும் கான்டீனிலேயே சாப்பிட்டுக் கொள்வோம்! இந்த மாதிரி கண்ட கண்ட இடத்திலே எல்லாம் ரயிலை நிறுத்த அவசியமில்லை!
உண்மையில் என்ன நடந்தது?
யாருக்குத் தெரியும்? திடீரென்று தண்டவாளங்கள் டான்ஸ் ஆடுது...! எங்களுடைய டிரெயின் பாதையிலிருந்து திரும்பி விட்டது...
தண்டவாளம் டான்ஸ் ஆடுதா? இது ஜெஸ்ஸி ஜேம்ஸ் டிரேட் மார்க் அல்லவா..?
ஜெ - ஜெ - ஜெஸ்ஸி ஜேம்ஸா..?



ஓடு! ஓடு! பாங்கில் போட்டு வைத் திருக்கும் பணத்தை எடுத்தாகணும்!
ஜெஸ்ஸி ஜேம்ஸ் வர்றான்!
வங்கிக்குப் போவோம்! வங்கிக்குப் போவோம்!
நில்லுங்கள்! கொஞ்ச நேரத்திற்கு முன் நீங்கள் சொன்ன வீராப்பு என்னாச்சு? நீங்க ளெல்லாம் தைரியசாலிகள் என்றல்லவா நினைத்தேன்!
அட போப்பா - அப்ப ஜெஸ்ஸி இங்குதான் வருவான் என்பது உறுதி யில்லாம இருந்தது! இனிமே வங்கியில் என் பணத்திற்குப் பாதுகாப்பில்லை! என்னைப் போக விடு
ம்ம்ம்.. சீக்கிரமாக.. பட்டுவாடா பண்ணுப்பா!
அடடே க்ளெம் - நீ கூட பாங்கில் பணம் போட்டிருக் கிறாயா?
BANK
மொள்ளப் பேசுப்பா..! எங்கிட்டே பணமே கிடையாதுங்கிற விஷயம் வெளியே தெரிஞ்சதுன்னு ஒரு பயல் ரம்மி ஆட்டத்திலே கடன் சொல்ல விட மாட்டான்!
ஜாலியைக் கண்டு பிடிக்கணும்! பயல் லாடமடிக்கும் இடத் தில்தான் இருப்பான்!
எக்ஸ்க்யூஸ் மீ சார்! ரயில்வே தண்ட வாளங்களுக்கான வழி சொல்ல முடியுமா?
ஓ... பேஷாய். நேராகப் போய் இடது பக்கமாய் திரும்பி மரங்கள் வந்தவுடன் வலது பக்கமாகத் திரும்புங்கள்! அங்குள்ள நதியைக் கடந்த பிறகு... திரும்பவும் வலது பக்கம் போகணும்!
எல்லாரும் வண்டி யில் ஏறுங்கள்! வண்டி கிளம்பப் போகிறது!
நாம் வந்ததை விட சீக்கிரமா ரயில் தண்டவாளத்தைப் போய்ச் சேர்ந்து விடலாம் போலிருக்கு!
அப்பாடி - உயிர் போச்சு! உன்னோட குதிரையை திருப்தி படுத்துவது ரொம்ப கஷ்டமான காரியம்பா! என்னிடமிருந்த மொத்த லாடங்களையும் எடுத்துப் போட்ட பிறகு தான் பயல் ஒரு முடிவுக்கு வந்தான்!
ஒரே சமயத்தில் இரண்டு ஜோடி எடுக்கும் வாடிக்கையாளர் வேறு யாராவது உண்டா? பார்த்து நல்லதா வாங்க வேணும்?
ஓ.கே. இப்போது சௌகரியமாக இருக்கிறதல்லவா?



சில சோமாறிகளைப் போய் நாம் சந்திக்க வேண்டியிருக்கு ஜாலி!
சிறிது நேரப் பயணத்திற்குப் பின்...
ஆவ், அதோ அந்த நோஞ்சான் பயலிடம் நான் கொஞ்சம் விளையாட்டுக் காட்டவா?
அப்பனே... ரயிலில் நீ விளையாடியது போதும்! பேசாமல் வாயை மூடிக் கொண்டு வா!
யா, யா
உங்களில் ஜெஸ்ஸி ஜேம்ஸ் என்பது யார்?
சிந்திக்கும் சக்தியற்ற கழிசடைகள்! இவன்களை சுமப்பது தவிர வேறு இலட்சியமே வாழ்க்கையில் கிடையாது!
நான்தான். நீ யார் தம்பி?
பெயர் லக்கி லூக்! உனக்கு ஒரு வேடிக்கை காட்ட வேண்டும்...
''தம்'' அடிக்கப் போறியா? இதிலென்ன வேடிக்கை?
தேங்க் யூ...
பரவாயில்லையே... குதிரை 'தம்' அடிக்கிறதா? இந்த வித்தைகளை வைத்து சர்க்கஸில் நீ நிறைய பணம் சம்பாதிக்கலாம் அப்பனே..!
அப்படியே இரு ஜெஸ்ஸி. வேடிக்கை இன்னும் முடியவில்லை. ஜாலி – ஓடத்துவங்கு!
!?!



ஹ்ம்ம்.. தூரம் சரியாக இருக்கும்னு நினைக்கிறேன்...
டுமீல்
க்ராக்!
ப்பூ ப்பூ!
அவ்லோதான்! டெக்சாஸ் காரர்கள் எப்படித் துப்பாக்கியை கையாளுவார்கள் என்பதை
நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் செய்து காட்டினேன்!
அபாரத் திறமைதான்! ஆனால் உன்னுடைய துப்பாக்கி சுடும் வித்தை பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. டெக்சாஸில் எங்கள் மீது எந்தவொரு கேஸும் கிடையாது!
நீ சொல்வது சரிதான்! வம்பில் சிக்காமல் விலகி நில். இல்லையேல் தனிப்பட்ட முறையில் உங்களை நானே ''கவனிக்க'' வேண்டி வரும்.
'இப்படி வித்தை காட்டறேன் பேர் வழி'ன்னு தம்மடிக்க வைத்தால் என் நுரையீரலுக்கு கேடு வந்து விடும்! இன்னமும் லேசான இருமல் இருக்கு!
இனிமேல்லாம் லக்கிட்டே சொல்லி ஒரு பைப் வாங்கிக் கொடுக்கச் சொல்லணும்! அது அவ்வளவு மோசமில் லைன்னு சொன்னாங்க...!
கோலி இன்னும் அவனுடன் விளையாட விரும்புகிறாயா?
செத்தேன்டா சாமி (ஹேம்லட் ஆக்ட் 1 செக் 1)



நாம் நத்திங் கல்ச்சில் இறங்கு வோம்! அந்தக் கோமாளியின் பாச்சா இந்த ஜெஸ்ஸியிடம் பலிக்காது என்று நான் காட்டப் போகிறேன்!
NOTHIN GULCH
நத்திங் கல்ச்சில்...
இதைக்குடி. உன்னுடைய இருமலை அது குணமாக்கும்...
உப்! உப்!
ஒரே தூங்கு மூஞ்சி ஊரா இருக்கேப்பா! என்னைப் போல் ஓடியாடி விளையாட நினைக்கும் ஆசாமிக்கு பொழுதே போகாதே!
கொஞ்சம் கசப்பா இருக்கு. லேசா உப்பு போட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும்!
உனக்கு நிச்சயம் விளையாட வாய்ப்புக் கிடைக்கும் கோலி! பொறுத்திருந்து பார்!
உங்களுக்கு வேடிக்கையும் விளையாட்டும் வேணுமா ஜென்டில் மென்? உங்களுக்காக நான் கொஞ்சம் இசைக்கட்டுமா?
இந்த ரோல் பேப் பரை கொஞ்சம் இறுக்கமாக இரு புறமும் பிடித்துக் கொள்கிறீர்களா..?
?
!
டுமீல்! டுமீல்! டுமீல்! டுமீல்!
தேங்க்ஸ். இப்ப இந்தப் பியானோவை இயக்க யாராவது
ஒரு நாணயத்தை எனக்குக் கொடுங்கள்!
???
இதுதான் சாவு ஊர் வலத்தின் போது இசைக்கப்படும்
துவக்க மியூசிக்! புத்தம் புது டியூன்!



எதற்காக எங்களைப் பயமுறுத்த முயற்சிக்கிறாய்? நாங்கள் தான் இங்கு ஒன்றுமே செய்யவில்லையே!
இருக்கலாம்! ஆனால் திரும்பவும் உன்னை எச்சரிக்கிறேன். இங்குள்ள மக்கள் எல்லாரும் விழிப்புடன் இருக்கிறார்கள்! என்னுடைய கண்ணும் எப்போதும் உன்மேலிருக்கும்!
ஆ.. அப்புறம் சொல்ல மறந்துட்டேனே... வெல்கம் டு நத்திங் கல்ச்!
ஊர்மக்கள் கொஞ்சம் இறங்கி வரும் வரை நாமும் அமைதியாக இருப்பது தான் நல்லது!
இந்த ஊர் முட்டாள்களுடன் நெருங்கிப் பழகுவோம்! முதலில் அவர்களை நம்முடைய நண்பர்களாக்கி விட்டு அப்புறமாக அவர்களைக் கொள்ளையடிப்போம்! நல்லவர்களென்று பெயர் எடுத்தாக வேண்டும்!
கடைக்காரரே - தாராளமாக ஊற்றுங்கள்!
மூ - மூ - மூன்று கோப்பை விஸ்கி, இ - இப்போதே தருகிறேன் மிஸ்டர் ஜேம்ஸ்!
பிறகு -
நத்திங் கல்ச் முரசு
இது என்னுடைய சகோதரன் பிராங்க் எழுதிய கட்டுரை. இன்றைய பேப்பரில் இது இடம் பெற வேண்டும் என விரும்புகிறேன்...!
ஆனால் இன்றைய பேப்பர் ஏற்கனவே பிரசுரமாகி விட்டதே! அடுத்த வாரம் வரை அடுத்த பேப்பர் வராதே..
அப்படியானால் விஷேச பதிப்பாக வெளியிடும்யா தாத்தா! இல்லாவிட்டால் ஈயத் தோட்டாவால் உம்மை சல்லடையாக்கி விடுவேன்! அப்புறம் உம் உடம்பிலிருந்து ஈயம் எடுத்து எழுத்துச் செய்ய வேண்டி வரும்!
இங்கு ஏதாவது பிரச்சனையா?
?
நோ - நோ! மிஸ்டர் ஜெஸ்ஸியுடன் பத்திரிக்கை சுதந்திரம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன்! அத்துடன் பத்திரிகைக்காக அவரிடமிருந்து ஒரு கட்டுரையும் பெற்றுக் கொண்டுள்ளேன்!
அப்படிப் போடு!


நத்திங் கல்ச்
முரசு
விசேஷ பதிப்பு
ஹேம்லட்
நவீன ராபின் ஹுட்டான ஜெஸ்ஸி ஜேம்ஸ் ஏழைகளுக்குக் கொடுப் பதற்காகவே பணக்காரர்களிடம் மட்டும் கொள்ளையடிக்கிறார்...!
ஆரம்பத்திலிருந்து இதைத்தான் சொல் கிறார்கள்!
அது சரி யார் இந்த "ஹேம்லட்" ஆசாமி?
விஷேச பதிப்பு!
'ஆம்லெட்'டைக் கண்டுபிடித்தவனாக இருப்பான்னு நினைக்கிறேன்!
ஜெஸ்ஸி ஏழைகளுக்கு கொடுப் பதற்காகத்தான் கொள்ளையடிக் கிறான் என்றால் நாம் கவலைப் படத்தேவையே இல்லை! நம் நகரில்தான் ஏழைகள் யாரும் இல்லையே!
உண்மை தான்!
அப்படியானால் சரி!
ஜெண்டில் மென்... யாராவது எனக்கு ஒரு ரவுண்ட் விஸ்கி வாங்கித் தர முடியுமா?
ஐயோ!
என்னது!
அடச்சே!
தரித்திரப்பயல்!
நீ இன்னும் ஓட்டாண்டியாகத் தான் இருக்கிறாயா க்ளெம்?
என்னை நம்பு சாண்டி. சீட்டாட்டத் தில் என்னை மொட்டையடித்து விட்டாய்! என்னிடம் ஒரு தம்புடி கூடக் கிடையாது!
கிழிஞ்சது போ! எல்லாரும் வாங்க! இங்கே ஒரு தரித்திரப் பயல் இருப்பதால் ஜெஸ்ஸி ஜேம்ஸ் நம் முடைய பணத்தைக் கொள்ளை யடித்து இந்தச் சட்டித் தலை யனிடம் கொடுத்து விடுவான்!!
?
காசில்லாத கபோதி!
அவனைத் தூக்கி லிடுங்கள்!
ஏழ்மை ஒழிக!
ஹேய், நான் சொல்வதை ஒரு நிமிடம் கேளுங்கள்..
டுமீல்! டுமீல்! டுமீல்!
க்ளெம் மேல் கை வைக்க நினைப் பவர்கள் - தத்தம் மனைவிகள் விதவைக் கோலத்தில் எப்படி
யிருப்பார்களென்று கற்பனை செய்து பார்த்துக் கொண்டால் தேவலை!



அப்பாடி! தேங்ஸ் லக்கி லூக்!
இது நல்லதற்கல்ல. இந்தப் பிச்சைக்கார நாயால் நம் எல்லாருக்கும் ஆபத்து!
நான் சொல்வதைக் கேளுங்கள்- ஆளுக்குக் கொஞ்சம் பணம் போட்டு அவனிடம் கொடுப்போம்! அப்படிச் செய்துவிட்டால் அவன் தொடர்ந்து ஏழையாக இருக்க மாட்டான்!
சரியான ஐடியா!
என்னது...?
இதை வச்சுக்கோ க்ளெம்!
ஆவ்?
ஹேய், நண்பர்களே! உங்கள் எல்லாருக் கும் நான் விஸ்கி வாங்கித் தருகிறேன்!
அட - தேவுடா! அவன் பணத்தை சூறை போடும் முன் நாம் தடுக்க வேண்டும்! அவனுடைய விஸ்கி செலவிற்கு நாம் பணம் கொடுப்போம்!
என்னைக் கேட்டால் - இந்த ஜெஸ்ஸி ஜேம்ஸ் அவ்வளவு மோசமானவன் அல்ல என்பேன். இன்னும் கொஞ்சம் ஊற்றுங்கள் கடைக்காரரே!
இரு இரு! இதற்கு நான் பணம் கொடுத்து விடுகிறேன்!
இந்த ஜெஸ்ஸி ஜேம்ஸ் எங்கிருந் தாலும் நீடூழி வாழ்க!
யாராவது ஒரு கை சீட்டாட வருகிறீர்களா?
நோ... நீ சீட்டாடக் கூடாது!
நான் சுமாராக சீட்டாடுவேன்..!



ஜெஸ்ஸி மீண்டும் இவனைப் பிச்சைக் காரனாக மாற்றி விடப் போகிறான்.
ஆனால் -
நீ பயங்கரமான கில்லாடி நண்பனே! உன்னை ஜெயிக்க முடியாது! நான் கிளம்புகிறேன்!
ஜெஸ்ஸி!
யா?
நீ வேண்டுமென்றே தோற்று விட்டாய்? தேவையற்ற சீட்டை வைத்துக் கொண்டு இரண்டு 'ஏஸ்'களை கீழே போட்டு விட்டாய்!
???
அதனால் என்ன? என்னை நானே ஏமாற்றிக் கொள்வதை எந்த ஒரு சட்டமும் தடுக்க முடியாதே!
போய் உனக்குத் தேவையான புல்லோ வேறு எதுவோ வாங்கிச் சாப்பிடு. நான் அவர்களைக் கண்காணிக்க வேண்டும்!
ஒரு சாமியார் பற்றியும் விவசாயி ஒருவரின் மகள் பற்றியுமான ஜோக் கேள்விப் பட்டிருக் கிறீர்களா?
சரியான விளை யாட்டுப் பிள்ளை!
ரெஸ்டாரண்ட்
என் நண்பர்கள் அத்தனை பேருக்கும் பிரியாணி கொடுங்கள்!
நீங்கள் சொன்ன ஐடியா ரொம்ப பிரமாதம் மிஸ்டர் பிராங்க்!
???
ஹோட்டலில் வழக் கமாக நடக்கும் கண்றாவியை விட இது நிச்சயம் நன்றாகயிருக்கும்!



அதைத் தொடர்ந்து
கலை விழா
மிஸ்டர் பிராங்க்
இன்று இரவு ஷேக்ஸ்பியர் பற்றி உரையாற்றுகிறார்.
அனுமதி இலவசம் அனைவரும் வருக!
...இனிமையான இளவரசர், உங்களைப் போன்ற வயதில் இருக்கும்போது, உலக வாழ்வில் இருந்து விடுபட முடியாத நிலையில் இருந்தார்...
ஏம்பா - இந்த ஷேக்ஸ்பியர் ஆசாமி யாருன்னு உனக்குத் தெரியும்?
நான் நினைக்கிறேன். அவன் ஒரு சைஞைக்காரனாக இருப்பான்னு!
..வெளியில் நடந்து கொள்ளும் முறையிலிருந்து ஒரு மனிதனை யாரும் பிரித்துப் பார்க்க முடியாது....
ஒண்ணு மட்டும் நிச்சயம்! இந்தக் கும்பல் நம்ம பொழப்புல மண் அள்ளிப் போட்டு விடுமோன்னு பயம் தேவை இல்லை!
இவ்வாறாக ஜெஸ்ஸியின் ஆட்கள் நத்திங் கல்ச் சமுக வாழ்க்கையில் ஒரு முக்கிய அங்கமாக மாறினர். இவை எல்லாவற்றையும் லக்கி லூக் கண்காணித்து கொண்டே இருந்தார்...
அல்லேலூயா! ....... அல்லேலூயா!
லா - லா - லா...
சகோதரர்களே! உங்களுடைய பக்தியை நான் குறை சொல்ல வில்லை! ஆனால் உங்களில் ஒரு சிலர் கொஞ்சம் அடக்கி வாசித்தால் காதுக்கு கொஞ்சம் லேசாக இருக்குமென்பது என் அபிப்ராயம்..
கேஷியர் சார், என்னிடமுள்ள பணத்தை இங்கு போட்டு வைக்க விரும்புகிறேன்!
நீங்கள் இங்கு பணம் போட விரும்புகிறீர்களா? அடி சக்கை! கோழி முட்டை யிடும்னு கேள்விப் பட்டிருக்கேன் - ஆனால் இதுவோ முட்டை, கோழியை இடுவது போல் தலைகீழா இருக்கே!
அந்த சேதி காட்டுத் தீ போல் பரவியது -
ஹேய், க்ளெம்! பாங்குக்கு ஏற்பட விருந்த அபாயம் விலகி விட்டது - உன்னிடமிருக்கும் பணத்தை இங்கு போட்டு வைக்க வில்லையா?
நோ. இப்போது நான் பணக்காரன் என்பது ஊருக்கே தெரியும். இனிமேல் யாருக்காகவும் நான் பிலிம் காட்டத் தேவையில்லை.


அங்கே
இரண்டு போலீஸ்காரங்க ஊருக்கு வெளியே தங்கி யிருக்கிறதை நான் பார்த்தேன் ஜெஸ்ஸி! சொன்ன மாதிரியே அவன்களை லேசா அடையாளம் கண்டு கிட்டேன்!
ஆல் ரைட். நாம் கிளம்புவோம்... யாருடன் இந்த முட்டாள்கள் விளையாடுகிறார்கள் என்பதைப் புரிய வைப்போம்!
அதன் பின்னர்..
லூக் சார்!
ஆமா பிரதர் -வெயில் பேயா அடிக்குது!
அப்படியே தலை யெல்லாம் சுத்துது!
அறைகள்
அதைக் கொண்டு வா பார்ப்போம்..!
மிஸ்டர் லக்கிலூக், நாங்கள் ஆற்றங் கரையில் இருக்கிறோம். முக்கியமான தகவல் உள்ளது. உடனே வரவும். ஸ்மித் & ஜோன்ஸ் பிங்கர்டன் ஏஜென்ஸி
ஆற்றங்கரையிலா? ரொம்பத் தூரம் போக வேண்டுமே! நகருக்குப் பாதுகாப்பற்ற நிலையில் அவ்வளவு தொலைவு போக மனமில்லை!
ஆனாலும் முக்கிய மான விஷயமாக இருக்கலாம்! ஜாலி... புறப்படத் தயாராகு!
ஜெஸ்ஸி - நீ சொன்னபடியே நடந்து விட்டது! நம்மைக் கண் காணித்த கடுவம்பூனை நகரை விட்டுப் பறந்து போய்விட்டது!


பிரதர்ஸ்.... ''ராபின்'' ஜெஸ்ஸி தவறு களைத் திருத்தி யமைக்கப் போகும் நாள் இது!
கொரில்லா போர் முறையைப் பயன் படுத்தப் போகிறோமா ஜெஸ்ஸி?
அடி தூள் கிளப்புவோம்!
உள்நாட்டுப் போரின்போது கொரில்லா படையினரிடம் ஜெஸ்ஸி ஜேம்ஸ் கும்பல் கற்றுக் கொண்ட பயங்கரவாத யுக்தி அது! இரத்தத்தை உறையச் செய்யும் கூச்சல் எழுப்பிக் கொண்டு வீதிகளில் நிற்போர் அனைவரையும் கதிகலங்கச் செய்வர். வீதியில் மக்கள் அனைவரும் ஓடி ஒளிந்த பிறகு சாவகாசமாக நகரை கொள்ளையடிப்பர்!
ஈ-ஹா!
ஈஈஈஹா!
ஹோ-ரா!
ஆனால் -
அட... இது நம்ம ஜெஸ்ஸி தம்பியின் கூட்டம் தானே? என்ன ஜோராய் குதிரை விடுகிறார்கள்! அந்த கோலி பையனைப் பாரேன்...!
எனக்கு மட்டும் இளமை திரும்பினால்...!
அட்டா ஜெஸ்ஸி! தூள் கிளப்புமா!
ஜெ - ஜெஸ்ஸி நாம எதிர் பார்த்ததை விட ரொம்ப பிர பலமாகிட்டோம் போலிருக்கே!
BANK
சீக்கிரத்திலேயே இந்த மர மண்டைகள் புரிந்து கொள் வார்கள்! கமான்... வங்கியினுள் கை வரிசையைக் காட்டுவோம்!



அடடே வாங்க மிஸ்டர் ஜெஸ்ஸி! இன்னும் கொஞ்சம் பணத்தைப் போட்டு வைக்க வந்தீங்களா?
ஊஹூம்! கோழிகள் திரும்பவும் முட்டை போடும் பொழைப்பை ஆரம்பிக்கப் போகுது!
முதல் முட்டை, இப்போ - இங்கே தான்! இரும்புப் பெட்டிக்குள் இருக்கும் பணத்தை அள்ளி எடு!
சரியான விளை யாட்டுப் புள்ளைங்கப்பா..!
அவர்கள் பாங்கை கொள்ளை யடித்து விட்டனர்! சுத்தமாய் காலி பண்ணி விட்டனர்!
..என்னது..?
ஓடுங்கள்.. போய் பதுங்கிக் கொள்ளுங்கள்!
ரைட்! கடைகளைத் தாக்குங்கள் - ஓட்டலையும் விடாதீர்கள்! எதையும் விட்டு வைக்காதீர்கள்!
உன்னை காணலை - அதனாலே எனக்குத் தேவையானதை நானே எடுத்துக்கிட்டேன்! ரொம்ப டாங்க்ஸ்பா!
ரொ-ரொம்ப சந்தோஷம்!
நாங்கள் ரயிலைக் கொள்ளை யடிக்கப் போகிறோம் - அதன் பிறகு மீண்டும் இங்கு வருவோம்!
குட் நைட்!



அதே சமயம் லக்கி லூக்-..
ம்ம்ம்.. ஆற்றங் கரைக்கு வந்தாச்சு...! அந்த இரண்டு ஆசாமிகளும் என்னவானார்கள்?
ஹெல்ப்! நாங்கள் இங்குதான் இருக்கிறோம்!
!
உங்களைச் சந்திப்பது சந் தோஷமாக இருக்கு மிஸ்டர் லூக்! இந்த கை விலங்கி லிருந்து எங்களை விடுவியுங்கள் - சாவி என்னுடைய பேண்ட் பாக்கெட்டிலேயே இருக்கிறது!
இதற்காகத்தான் என்னை இங்கு வரும்படிச் செய்தீர்களா?!
நா-நாங்கள் இங்கு மறைந்திருந்தோம்.
ஆனல் ஜெஸ்ஸியும் அவனது பயல் களும் எங்களை மடக்கி..
..அப்புறம் கட்டாயப்படுத்தி உங்களுக்கு ஒரு சீட்டு எழுதும்படிச் செய்தனர்..!
நாங்கள் போலீஸ் காரர்கள் என்பதை எப்படித்தான் கண்டு பிடித்தார்களோ தெரியவில்லை! ஆச் சரியமாக இருக்கு!
இங்கிருந்து கிளம்புங்கள்! போய் எனக்காக ஒக்லஹாமா மாநில எல்லையில் காத்திருங்கள். அந்த அயோக்கிய சிகாமணிகளை நான் டெக்சாஸிலிருந்து விரட்டி யடிக்கப் போகிறேன்! டெக்சாஸ் பார்டரை விட்டு வெளியேறிய உடன் பயல்களை கைது செய்யுங்கள்!
உதவிக்கு ஏராளமானவர்களை திரட்டிக் கொள்ளுங்கள்! நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், அங்கு அவர்கள் வந்த உடன் மடக் கிப் பிடிக்க வேண்டியதுதான்!


ஆக, இது ஜெஸ்ஸியின் சதித்திட்டம் தானு? நத்திங் கல்ச்சில் இந் நேரம் பெரிய பிரச்சனை எழுந்திருக்கும்!
யாரது?
அது சூதாடி க்ளெம் போலத் தெரியுதே!
டவுனை விட்டு அவசரம் அவசர மாகப் பயல் கிளம்பியது போலத் தெரிகிறது - சவரம் செய்யக்கூட காத்திராமல் கிளம்பிவிட்டான் போலிருக்கு!
நாம் அவனை விரட்டிப் பிடிப்போம்!
ரொம்ப சந்தோஷம்!
வேகமாய் போ ஜாலி! அன்ன நடை போட இதுவா சமயம்? ஹூம்...
தூள் கிளப்புகிறேன் பாருங்கள்!
க்ளெம்! குதிரையை நிறுத்து!
இதுக்குத்தான் இத்தனை அலட்டல்!
என்னைப் போக விடு லூக். ஜெஸ்ஸியின் சிகாமணிகள் நத்திங் கல்ச்சை சூறையாடி விட்டனர்! வங்கியில் இருந்த எல்லாருடைய பணத்தையும் திருடிவிட்டனர்! எனக்கு பாங்கில் கணக்கு கிடையாது என்பதால் என் பணம் பிழைத்தது!
இப்போது அங்கே எஞ்சியிருக்கும் ஒரே பணக்காரன் நான்தான்! ஓட் டாண்டிகள் இருக்கும் நகரத்தில் நான் வாழ விரும்பவில்லை. பணம் சேர்ந்து விட்டால் அதற்கு ஏற்றபடி "ஹை-க்ளாஸ்" மக் களோடு இருப்பதுதான் நல்லது!
அடுத்து என்ன செய்யப் போவதாக ஜெஸ்ஸி சொன்னான்?
ரயிலை கொள்ளையடிக்கப் போவ தாக அந்தக் கசமாலம் சொன்னான்! அப்புறம் திரும்பவும் டவுனுக்கு வந்து ரகளை பண்ணுவானாம்! இப்போ ஆளை விடுப்பா!
அந்த சட்ட விரோதி கள் ரயிலை மடக்கும் முன்பு நாம் போய் ரயிலைப் பிடித்து விட வேண்டும்!
அதென்ன பிரமாதம்?



குப் குப் குப் குப் கூ
- கூக்
போ பேபி போ!
குப் குப் குப் குப் கூ
- கூக்
டுமீல்! டுமீல்! டுமீல்!
இதோ ரயில் வருது!
அவன் ரயிலை நிறுத்தினால் போதும்!
ரயில் கொள்ளை தான்! பிரேக்கைப் போடு!
ஹ்ம்ம்ம்! ரயிலில் தங்கம் ஏற்றிய போதே எனக்குத் தெரியும் -இன்று ஏதோ தலைவலி காத்திருக்குன்னு!
உஷ் ஷ்ஷ் - ஷ்ஷ்
ஸ்டாப்! உங்களை எதிர்பார்த்து கொள்ளைக்காரப் பசங்கள் காத்திருக்கிறார்கள்!
நாங்கள் சரண டைந்து விட்டோம்- தேவையானதை எடுத்துக்கலாம் சார்!
நோ! நான் கொள்ளைக்காரனல்ல! ஜெஸ்ஸி ஜேம்ஸும் அவனுடைய கூட்டாளிகளும் தான் கொள்ளை யடிக்கக் காத்திருக்கிறார்கள்! ரயிலை இங்கேயே விட்டு விட்டு பக்கத்து ரயில் நிலையத்திற்கு நடந்து போங்க!
இதிலிருக்கும் தங்க மெல்லாம் என்ன வாவதாம்?
நத்திங் கல்ச்சில் இருக்கும் பாதுகாப்பு அறையில் வைக்கப் போகிறேன்! ஜாலி! ரயிலைத் தொடர்ந்து ஓடிவா!
போலாம் ரை...ட்...
வர வர இந்த ரயில் பயணங்கள் ரொம்ப கிறுக்குத்தனமாய் இருக்குப்பா! சே!


அதே சமயம் கொஞ்ச தூரத்திற்கு அப்பால் -
ஆவ்! எனக்கு சான்ஸ் கொடு ஜெஸ்ஸி! போன தடவை மாதிரி கோட்டை விட்டுட மாட்டேன்!
ஆல் ரைட் - ஆனால் இந்தத் தடவை ஏதாவது கோல்மால் பண்ணினே -
பிராங்க், நீயும் நானும் போய் மரத்தில் ஏறி ஒளிந்து கொள்வோம்!
ஆனால் ஜெஸ்ஸி, இப்படியே குதிரை மீதே இருந்து விட்டா லென்னப்பா?
பட்க்!
கொள்ளையர்களை மடக்க ரயிலை தூண்டில் புழுவாகப் பயன்படுத்துவதா? நல்ல யோசனைதான் லக்கி!
ம்ம்ம் "இடத்தை" நெருங்கி விட்டோம் ஜாலி! கமான்!
ஹூப்!
இந்தக் கழுதைக்கு 'இரும்புக் குதிரைன்னு' பெயராம்? சே!
அடி.. சூப்பர்!



'ஹாண்ட்ஸ் அப் குண்டு பையா!'
டுமீல்
ஜெஸ்ஸி! பிராங்க்! ஓடுங்க.. ஓடுங்க.. இது ஏதோ சதிவலை!
அடச்சே! ரயில் தண்டவாளத் தோட சேர்த்துக் கட்டிய கயிற்றை கழற்ற மறந்திட்டேன்!
க்ராக்!
இனி தப்ப முடியாது கோலி!
அட போப்பா!
விடாதே - பிடி ஜாலி!
இதற்கிடையில்...
ராபின் ஜெஸ்ஸி தன் தோழர்களை 'அம்போ'வென விட்டுச் செல்பவனல்ல- அந்த முட்டாளால் சதா பிரச்சனை வந்தாலும் அவனைக் காப்பாற்றாமல் இருக்க மாட்டான்!
என்னால் செய்ய முடியும் ஆனால் அது எனக்குப் பிடிக்க வில்லை.


நத்திங் கல்ச் திரும்பிய போது...
ஹேய், அங்கே பாரேன்! லக்கி லூக் ஒரு கைதியைக் கட்டி இழுத்து வர்றான்!
கிழிஞ்சது போ! இருக்கும் பிரச்சனை போதாதென்று இவன் பங்குக்கு புதுசாய் தலைவலியை கொண்டு வர்றானு...?
எல்லாரும் கவனமாய் கேளுங்கள்! கோலியை நான் கைது செய்துள்ளேன்! இவனை ஷெரீப் வசம் ஒப்படைக்கப் போகிறேன்.
அதன் பின் இவன் மீது சட்ட விசாரணை நடத்தலாம்! கேஷியர் சார், இங்கே கொஞ்சம் வார்றீங்களா?
இந்தத் தங்கத்தை பாங்கில் வைத்திருங்கள்!
இது ரயில்வே கம்பெனிக்குச் சொந்தமானது!
தங்கமா? பாங்கிலா?
அட தேவுடா - வேற இடமே கிடைக்கலைன்னு பாங்கில் வைக்க நினைக்கிறீங்களா? இனிமேல் விலை மதிப்புள்ள எதையும் பாங்கில் வைப்ப தில்லைன்னு இப்போது தான் முடிவு செய்தோம்...!
சொன்னதை செய்யாவிட்டால் செம்மறியாட்டைத் தோலை உரிப்பது போல் உன் தோலை உறிச்சிடுவேன்!
பொத்!
வசமாக மாட்டிக் கிட்டான்! பாவம்!
கேஷியர் வேலைங்கறது ரொம்ப சிக்கலான பொழைப்பு தான்பா!
பின்னர் -
லக்கி! இந்த குண்டோதரனை இங்கே கொண்டு வந்தது சரியாகப் படலையே! ஜெஸ்ஸியும், பிராங்க்கும் இங்கு வந்து...
அதற்காகத்தான் இவனை இங்கே கொண்டு வந்திருக் கிறேன்! இவனை லாக்கப்பில் அடைத்து வையுங்கள்! நத்திங் கல்ச் சட்ட விதிகளோடு யாரும் விளையாட முடியாது என்பதை அந்த அயோக்கியர்களுக்குக் காட்டுவோம். இந்த ஐடியா உங்களுக்குப் பிடிக்காவிட்டால் லாக்கப் சாவியை என்னிடம் கொடுத்துவிட்டு ஓடிப் போங்கள்!
வ-வந்து... இப்போ தான் அஞ்சு குழந்தைகளுள்ள ஒரு விதவையை மறுமணம் செய்திருக்கிறேன்! அவர்களைப் பற்றியும் நினைக்க வேண்டி இருக்கே..! அதனால இந்தா பிடி!


அன்று இரவில்...
உனக்கு டக்கரான ஐடியால்லாம் வருதுப்பா! பாங்க் கேஷியரிடம் தோலை உரிப்பேன்னு சொன்னியே - அதைத்தான் சொல்கிறேன்! என் சகோதரன்கள் வந்த பிறகு உன்னை அதுமாதிரிதான் தோலை உரிக்கப் போறோம்! ஹா! ஹா! ஹா!
கொஞ்ச நேரம் வாயை மூடு கோலி!
?
வெளியில் ஏதோ நடக்குது - நகர மக்கள் கூட்டமாக தங்களுக்குள் ஏதோ பேசிக் கொள்கிறார்கள்! அட - இந்தப் பக்கமாகத்தான் வருகின்றனர்...!
விசாரணை எதுவுமின்றி என்னைக் கொல்லப் போறாங்க! லூக் - நீ தான் என்னைக் காப்பாற்றணும்! இரக்கம் காட்டுபா!
என் குடும்பத்தினர் காரணமாகத் தான் நான் தவறான பாதையிலே போய் விட்டேன். என் மீது நியாயமான விசாரணை நடத்தணும்!
நியாயமான விசாரணை!
நியாயமான விசாரணை!
சும்மா இருடா மாங்கா மடையா! அவர்கள் உன்னைக் கொல்ல வரவில்லை - உன்னுடைய கூட்டாளிகளுக்குப் பயந்து உன்னை விடுதலை செய்துவிட வருகின்றனர்!
ஷெரீப்
உங்களுக் கெல்லாம் என்ன வேணும்?
அந்தக் கைதியை எங்களிடம் ஒப்படைத்து விடு லூக்! அவனை நாங்கள் ஒன்றும் செய்ய மாட்டோம்?!
கோலி மீது நியாயமான விசாரணை நடத்தப்படும்! அதை மாற்றும் எண்ணத்தோடு இதற்கு மேல் யாராவது அடி எடுத்து வைத்தால் என் துப்பாக்கிதான் பேசும்!
ஓ.கே. லூக். நீ என்ன சொன்னாலும் சரிதான்! அவன் மீது நாளை விசாரணை நடத்துவோம்!


அட... என்னப்பா லக்கி..! அவங்ககிட்டே என்னை ஒப்படைச்சிருக்கலாமில்லே! வரி செலுத்துறவங்களுக்கு ஒரு விசாரணை செலவாவது மிச்சமாகியிருக்குமே! ரொம்ப பயந்திட்டியா?
நீ இப்போ வாயை மூடா விட்டால் நானே உன்னைக் கழுத்தை நெறித்துக் கொன்று விடுவேன்!
உஷ்! சரிப்பா - உன் இஷ்டம்! இனி சட்டப்படியே எல்லாம் நடக்கட்டும், குட் நைட் கண்ணம்மா!
மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) உள்ளூர் பள்ளிக் கூடத்தின் வகுப்பறை கோர்ட் ஹாலாக மாற்றப்பட்டது...
கோர்ட்டில் அமைதி!
பிரதிவாதியைக் கூப்பிடுங்கள்!
பிரதிவாதி கோலி!
நீங்கள் எல்லாரும் உட்காரலாம்!
நீங்கள் தயார்னு நானும் தயார் ஜட்ஜ்!
தேங்க் யூ மிஸ்டர் கோலி! அரசுக்கும் மிஸ்டர் கோலிக்கும் இடையிலான வழக்கு இது!
கோலிக்கும் அரசுக்கு மிடையிலான வழக்குன்னு சொல்லுங்க! ஹா! ஹா! ஹா!



அரசுத் தரப்பில் யாராவது சாட்சிகள் உள்ளனரா?
நான் இருக்கேன்!
ஓ.கே.! சத்தியப் பிரமாணம் எடுத்துவிட்டு உங்களுடைய சாட்சியத்தை சொல்லுங்கள்!
..நான் சொல்வ தெல்லாம் உண்மை - உண்மையைத் தவிர வேறு ஒன்று மில்லை!
இது சத்தியம்!
சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள்!
கொள்ளை யடிக்கும் நோக்கத்தில் கோலி ரயிலைக் கவிழ்த்ததை நான் பார்த்தேன்!
நிச்சயமாகத் தெரியுமா?
ஓ யெஸ்! ரயிலை அவன் கவிழ்த்தபோது நான் தான் ரயிலை ஓட்டிக் கொண்டிருந்தேன்! அந்த சமயத்தில் தான் குற்றம் சாட்டப்பட்டுள்ள கோலியைக் கைது செய்தேன்!
ரயிலை ஓட்டிச் செல்ல உங்களுக்கு லைசென்ஸ் இருக்கா? நீங்கள் ரயில்வே கம்பெனிக்காக வேலை செய்கிறீர்களா?
வ-வந்து.. இல்லை.. ஆனால்..
கேட்டீர்களா யுவர் ஆனர்? இந்த ஆசாமி அனுமதி இல்லாமல் ரயிலை ஓட்டிச் சென்றுள்ளான்... ஒருக்கால் இவன் ரயிலையே திருடியிருக்கலாம்! குற்றம் புரிந்ததே இவனாக இருக்கலாம்!
..இருந்த போதிலும், நத்திங் கல்ச்சில் 'நல்ல பிள்ளை' என்று பெயரெடுத்த இந்த உத்தமர் மீது குற்றம் சாட்ட அனுமதித்திருக் கிறோம். என்னுடைய கட்சிக் காரர் சர்ச் பாடகர் குழுவில் பாடுபவர்! இவருடைய நன்னடத்தைக்கு சாட்சிகளே தேவை இல்லை - இந்த நகரே இவருடைய சாட்சிகள்தான்!
அப்படிப் போடு! ஆமா - ஆமா -
ஹிப் ஹிப் - ஹோரே!
சைலன்ஸ்! இது கோர்ட்!
அரசு தரப்பு வக்கீல் எதுவும் சொல்ல வேண்டியுள்ளதா?
ஒன்றுமில்லை யுவர் ஆனர்!


எல்லோரும் சேர்ந்து நாடகம் ஆடுகிறீர்களா? இது சட்ட விசாரணையே அல்ல - கேலிக் கூத்து!
மிஸ்டர் லூக்! முன்பு இந்த நகருக்கு நீங்கள் பல உதவி களைச் செய்திருந்தாலும், இந்த நீதிமன்றத்திற்கு நீங்கள் உரிய மரியாதை அளிக்க வேண்டு மென எச்சரிக்கிறேன்...!
..அல்லது இதற்காக நீங்கள் பின்னர் வருத்தப்படுவீர்கள்! இந்த ரயில் விவகாரம் இன்னும் தீர்ந்து விடவில்லை!
ஓ.. இதை நாம் அப்படியே மறந்து விடுவோம் யுவர் ஆனர்! மிஸ்டர் லூக் ரயிலைத் திருடிய போது கெட்ட எண்ணத்தில் செய்திருக்கமாட்டார்!
ஜூரிகள், தங்களுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறீர்களா?
எங்களுடைய மனசாட்சியை அலசி ஆராய்ந்து பார்த்தபோது, குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு நிரபராதி என்பது தெளிவா கிறது யுவர் ஆனர்! இவர் தனது கூட்டாளிகளிடம் நம்மைப் பற்றி நினைவுபடுத்துவார் என நம்புகிறோம்!
கைதியை விடுதலை செய்கிறேன்!
ஸ்கூல்
டிங்! டாங்!
'நம்ம ஆளு' கோலி வாழ்க!
ஹி! ஹி! ஹி!
அப்பாடி! நிம்மதி! பீடை ஒழிந்தது!
ஆமாம்பா! இனிமே அவன் இங்கே வரமாட்டான்னு நெனைக்கிறேன்!
?!!


லக்கி லூக் எங்களுடைய நிலைமையை நீ புரிந்து கொள்வாய் என நம்புகிறேன்...!
நாம் கிளம்பலாம் ஜாலி! முதுகெலும்பில்லாத மனுஷங்கள் இருக்குமிடத்தில் நமக்கென்ன வேலை!
நாம ஏதோ சொதப் பிட்டோம்னு எனக்குப் படுது!
ஆமா - இப்போ வங்கியில் தங்கம் வைக்கப் பட்டிருப்பது கோலிக்குத் தெரியும்!
பயல் திரும்பவும் வந்தால் நம்மைப் பாதுகாக்க லக்கியும் வர மாட்டான்!
அடச்சே - ஏன்தான் இந்த மக்கள் விலைமதிப்புள்ள பொருட்களை வீட்டில் வைத்துத் தொலைக்காமல் பாங்க் லாக்கரில் கொண்டு வந்து வைத்து என் உயிரை வாங்குகிறார்களோ?!
டேய், அதோ வருகிறார்கள்! ஜெஸ்ஸி! பிராங்க்!
வாப்பா என் சிங்கக் குட்டி! உன்னைக் காப்பாற்றத்தான் நாங்கள் வந்து கொண்டிருக் கிறோம்! அதற்குள் நீயாகத் தப்பி வந்து விட்டாயா?
நோ! அந்த மர மண்டைகள் என்னை விடுதலை செஞ்சு அனுப்பிட்டாங்க!
நம் குடும்பத்துலேயே இப்படி நடப்பது இதுதான் முதல் தடவை!
நான் சொல்றதைக் கேளுங்க. பாங்க்கிலே எக்கச்சக்கமாய் தங்கம் இருக்கு! நமக்கு இடைஞ்சல் பண்ண லக்கி லூக் அங்கே இல்லை - மனசு ஒடிஞ்சு அங்கிருந்து போயிட்டான்!
பிரமாதம்... டெக்சாஸின் மற்ற நகரங்கள் மீது கை வைக்கும் முன்பு நத்திங் கல்ச் மீது திரும்பவும் தாக்குதல் நடத்துவோம். இந்த ஸ்டேட்ல ஏராளமான வாய்ப்புகள் உள்ளது!


வாய்ப்புகள் மட்டு மல்ல - பயந்தாங் கொள்ளிப் பசங் களும் நிறையவே இருக்கிற ஸ்டேட் இது!
ஹா! ஹா! ஹா!
இதற்கிடையில், நத்திங் கல்ச் ஓட்டலில் சிரித்து மகிழ்ந்தவர்கள் சோகமாகக் கூடியிருந்தனர்...
மனசில் படுறதை சொல்லட்டுமா? இங்கே இருக்க மனசில்லாமல் லக்கி லூக் போய் விட்டதில் தப்பில்லை!
நாம அவரை ரொம்பக் கேவலப் படுத்தி விட்டோம்!
யாராவது போய் அவருடன் பேசி, நமக்கு உதவ திரும்பவும் அவரைக் கூட்டி வருவோம்!
உன்னுடைய வங்கியைக் காப்பாற்றணும்கிற நினைப்பிலே நீ அப்படிச் சொல்கிறாய்!
நாம நடந்துக் கிட்ட லட்சணத்திற்கு அவரது உதவி ஒண்ணுதான் குறைச்சல்!
நான் போய் அவரைக் கண்டு பிடித்து மன்னிப்புக் கேட்கப் போகிறேன்!
நானும் உங்களுடன் வருகிறேன், ஜட்ஜ்!
அப்படியே செய்வோம்!
ம்ம்க்கும்... ம்ம்க்கும்..
சட்டென்று விளையாடுப்பா ஜாலி! இதுவே நிஜப் போட்டியாக இருந்தால் மெதுவாக ஆடுகிறாய் என்று விலக்கிவிடுவார்கள்!
ம்ம்க்கும்.. ம்ம்க்கும்!
லக்கி லூக், நா - நாங்கள் கொஞ்சம் பேச வேண்டும்...
ஹி-ஹி-ஹி-ஹி-
என்னுடைய கிங் கிற்கு செக் வைத்து விட்டாயா?
மோசமான "மூவ்" வாச்சே!


எங்கள் முகத்தில் விழிக்க நீங்கள் விரும்ப வில்லை என்பது புரியுது!
பாரு.. உன் குதிரை அம்பேல்!
நாங்கள் எல்லாருமே கோழை கள்...! அதிலும் என்னை விட மிக மோசமான கோழை இங்கு யாரும் இல்லை! ஒத்துக் கொள் கிறேன்!
ஆனாலும் எங்களுக்கு நீ பல்வேறு சமயங்களில் செய்த உதவிகளுக்கு நன்றி சொல்லவே நாங்கள்...
..வந்துள்ளோம்!
'காசில்' பண்ணலாமான்னு பார்க்கிறேன்!
...திரும்பவும் ஜெஸ்ஸி ஜேம்ஸ் இங்கே வந்தால் நீ நினைப்பது மாதிரி நாங்கள் ஒரேயடியாக முதுகெலும்பில்லாத கோழை கள் அல்ல என்பதை நிரூபித்துக் காட்டப் போகிறோம்!
செக்...
என்னது?
அவனுடைய குதிரையைக் கவனித்தீர்களா ஜட்ஜ்?
யா, பயல் மெள்ளத்தான் விளையாடுகிறான்! ஆனாலும் ஆட்டம் மோசமில்லை! இப்போது ஜெஸ்ஸி கும்பல் இங்கு வந்தால் அவர்களுக்கு சூடான வரவேற்புத் தர நாம் தயாராக இருக்க வேண்டும்!
இதற்கிடையில்..
காய்கள் எல்லாவற்றையும் எடுத்து வை ஜாலி! இங்கு என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கப் போகிறேன்!



விவாதம் நடந்து கொண்டிருந்த அதே நேரம் மூன்று ரவுடிகளும் நத்திங் கல்ச் நோக்கி வந்த வண்ணம் இருந்தனர்...
அந்த வங்கியில் இருக்கும் தங்கம் எக்கச்சக்கமான கண்ணீரைத் துடைக்க உதவும்!
ஆமாமா - நாம இனி கண்ணீரே விட வேண்டியிருக்காது! இனி மேல் சூப்பரான ஓட்டல்களில் தான் சாப்பாடு! அருமையான லாட்ஜில் தான் ஜாகை!
தோழர்களே - இதோ வந்து விட்டோம்! எல்லாம் தயாரா?
யா!
கூச்சல் போட்டு ஆர்ப்பாட்டம் பண்ண அவசியமில்லை! இந்தப் பயந்தாங்கொள்ளிப் பசங்கள் தானகவே ஓடிவிடுவான்கள்! தங்கத்தை அள்ளுவோம் வாருங்கள்!
பாங்க்
பாங்க
BA
உப்?
???
பெருச்சாளிகளுக்கு அனுமதி கிடையாது!
இவண் -
நத்திங் கல்ச் நகர மக்கள்



மறுகணம்-
இந்தப் பயல்கள் போக்கு சரியாகப் படலை! கமான் நாம் ஓடிடுவோம்!
திடீர் தாக்குதலா? இந்த ராபின் ஜெஸ்ஸிக்கு சதி வலை விரிக்கும் அளவிற்கு தைரியம் வந்து விட்டதா?
இன்னொரு தடவை அந்த ஷேக்ஸ்பியர் பற்றி ஏதாவது சொன்னால் உன்னுடைய காதில் ஓட்டை போட்டு விடுவேன்!
தப்பி ஓடுகிறார்கள்! எல்லாரும் விரட்டிப் பிடியுங்கள்!
சாது மிரண்டால் காடு கொள்ளாது தான்! அதற்காக இப்படியா?


சட்ட விரோதிகளிடமிருந்த குதிரைகள் சோம்பேறிக் குதிரை களாக இருந்த போதிலும் சிட்டாகப் பறந்தன...
ஊர் முழுசும் நம்மை விரட்டி வருது!
ஹெஹ்! அந்த முட்டாள்களால் நம்மை ஒரு போதும் பிடிக்க முடியாது!
அங்கே-
எல்லாரும் ஜெஸ்ஸி ஆட்களை விரட்டிப் போகிறார்கள்!
ம்ம்ம்.. பறக்கணும் ஜாலி!
பைன்! பைன்! அதற்காக என் விலா எலும்பில் இப்படி உதைக் கணுமாக்கும்?
இவ்ளோ மெதுவா செஸ் ஆடிய இந்தக் குதிரையா இவ்வளவு வேகமா ஓடுது?!
ஜெஸ்ஸி! லக்கி லூக்கும் நம்மை விரட்டி வர்றான்!
கவலைப் படாதே தோழா!
ஜெஸ்ஸி! அவர்கள் கோலியைப் பிடித்து விட்டனர்!
நம்முடைய தோழனுக்காக பின்னர் ஒருநாள் அவர்களைப் பழி வாங்குவோம்!
அடேய் மாங்காய் மடையா! "இன்றைய ஏழை" கோலி என்பதை மறந்து விட்டாயா? எல்லாப் பணத்தையும் இன்று அவனை வைத்திருக்கச் சொல்லிக் கொடுத்தாய்?


ஓஹோ... அப்படியா? என் மனசாட்சி அந்தத் தடிமாடை... சே..சே.. அந்த நண்பனை அப்படியே விட்டு விட்டுப் போக சம்மதிக்க வில்லை! குதிரையை அந்த தோப்பு பகுதிக்குத் திருப்பு! அங்கிருந்து நம்முடைய திடீர் தாக்குதலை நடத்துவோம்!
ஹோ!
ஓ.. ப்ளீஸ்... ப்ளீஸ்.. குதிரையை நிறுத்து!
அந்தத் தோப்பை சுற்றி வளையுங்கள்! இந்த தடி முண்டத்தை சிலர் பார்த்துக் கொள்ளுங்கள்! மற்றவர்களைத் தேடி நான் மட்டும் உள்ளே போகிறேன்!
ஆனல் இது ரொம்ப ஆபத்தாச்சே லக்கி! இருவருக்கு எதிராக நீ ஒருவன்! உன்னைச் சுற்றி வளைத்து அமுக்கி விடுவர்!
என்னிடம் உள்ள குதிரை மூன்று பேருக்குச் சமம்!
அந்தக் காலத்தில் ராபின் ஹூட் செய்தது போல, அந்த முட்டாள் கள் இங்கு வந்த உடன் அவர்கள் மீது பாய்ந்து விடுவோம்!
தயாராக இரு, குதிரையின் குளம்படிச் சத்தம் கேட்கிறது. அவன் நமக்குக் கீழே கடந்து செல்லப் போகிறான்!



இதோ வந்து விட்டான்! கீழே குதி!
ஆனால் ஜெஸ்...
'குதி' என்று சொன்னால் குதிக்க வேண்டியது தானே!
ஜெஸ்ஸி இங்கே யாருமே இல்லை!
என்னது?
எல்லா இடத்திலும் ஒரே நேரத்தில் என்னால் இருக்க முடியாதுதான். இது எப்படி இருக்கு?
என் குதிரையை மட்டும் முதலில் தூண்டில் புழுவாக அனுப்பினேன். உன்னுடைய முட்டாள் சகா கீழே குதிப்பதைப் பார்த்த உடன் நீயும் அதே மரக் கிளையில்தான் இருப்பாய் என முடிவு செய்தேன். ராபின் ஹுட் கதைகளை நீ மட்டும் தான் படித்திருக்கிறாயா - என்ன?
ஜாலி ஜம்பர்! அந்த மீசைக்காரனைக் கவனி!
ஐயோ!
ரொம்ப சந்தோஷம்!
மடேர்!
இதோ வந்து விட்டார்!
கரும்புள்ளி செம்புள்ளி குத்தி கழுதைமேல் ஏற்றுவோமா?
ஹோரே!




'லயன் காமிக்ஸ்' மாத இதழ் வெளியிடுவோர்: **பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,** தபால் பெட்டி எண்: 374, சிவகாசி - 626 123. போன்: 20649.

அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி. போன்: 21159. வெளியீடு நிர்: 104 ஆசிரியர்: **S. விஜயன்**

# "மாதம் ஒரு வாசகர்"



| | | |
|---|---|---|
| வாசகர் பெயர் | | Dr. D. பாலசுப்பிரமணியன் M.B.B.S |
| முகவரி | : | 136-A, வடக்குரதவீதி,<br>சிவகாசி - 626 123. |
| பொழுது போக்குகள் | : | தோட்டக்கலை, ஆன்மீக, விஞ்ஞான புத்தகங்கள், யோகாசனம், களைப்பினை நீக்க லயன் காமிக்ஸ். |
| லயன் காமிக்ஸ் படிப்பது எத்தனை காலமாய்? | : | மாடஸ்டியின் அறிமுகத்திலிருந்து |
| லயன் காமிக்ஸ் அறிமுகமானது எப்படி? | : | முத்து காமிக்ஸ் முதல் வெளியீட்டிலிருந்து படிக்க ஆரம்பித்து விட்டதால், நமது சிங்கத்திலிருந்து எப்படித் தப்ப முடியும்? |
| நீங்கள் படிக்கும் இதர பத்திரிக்கைகள் என்ன? | : | தி ஹிண்டு, துக்ளக், ஓம்சக்தி<br>மருத்துவ இதழ்கள், மாறுதலுக்கு மறக்க இயலாத உங்கள் வெளியீடுகள் |
| இதுவரை வந்த லயன் காமிக்ஸ் கதைகளில் நீங்கள் மிகவும் ரசித்துப் படித்தது எந்தக் கதை? | : | மாடஸ்டி + டெக்ஸ்வில்லர் கதைகள் (உதாரணமாக டிராகன் நகரம், நடுக்கடல் அடிமைகள்) |
| உங்களைத் தவிர வேறு யாரும் வீட்டில் லயன் காமிக்ஸ் படிக்கிறார்களா? | : | என்னை ஏற்கனவே மிஞ்சிவிட்ட எனது மகன் துரை பிரசன்னு |
| படித்து முடித்த பின் இதழை என்ன செய்வீர்கள்? | : | வீட்டு நூலகத்தில்<br>அழகுற அரங்கேறிவிடும். |

F.4


ஒரு பெண் +
ஒரு பெயிண்டிங்
= பரலோகம்!
பிற்பகல் வேளை - பார்க்கிங் ஏரியாவை விட்டு கூக்கி எங்கோ வெளிக் கிளம்பியபோது, அடுத்த கட்டிடத்திலிருந்த துப்பறியும் ஜோடிகளில் ஒருவரான பெய்லி அவனை அழைத்தார்.
ஹே.. கூக்கி! ஒரு நிமிஷம் நில்லேன்!
என்ன ஸார் விஷயம்?
பரபரப்பான அனுபவம் ஏதாவது -
அப்படி எல்லாம் இல்லை!... நீ எங்கேயாவது அவசரமாக போய்க் கொண்டிருக்கிறாயா என்ன?


என்னுடைய ஸ்வீட்டி நீனுவை சந்திக்கச் சென்று கொண்டிருக்கிறேன்..
அவளை நாளைக்குப் போய் பாரேன் - ப்ளீஸ்!
ஒரு வழக்கில் உடனடியாக நான் கோர்ட்டில் ஆஜராக வேண்டிய நெருக்கடி. ஒரு கேஸ் விஷயமாக ஏற்கனவே ஸ்பென்ஸர் சான்பிரான் ஸிஸ்கோ போயிருக்கிறான்.
சரி.. முதலில் பட்டென்று விஷயத்தை போட்டு உடையுங்கள்.
அடுத்த அரை மணி நேரத்தில் ஒரு புது வாடிக்கையாளர் என்னை சந்திக்க இங்கே வருவதாக ஏற்பாடு. எனக்குப் பதிலாக நீ இங்கே இருந்து பார்ட்டி கொடுக்கும் விபரங் களை சேகரித்து வை!
ஹைய்யா..! நானும் உங்களைப் போல டிடெக்டிவ் ஆகப் போகிறேனு?
பிரச்னை என்னவென்று கேட்டு வை - போதும்! நான் இருக்க மாட்டேன்.. நாளை வா என்று அவளுக்கு போன் பண்ணி சொல்லி விட எவ்வளவோ முயன்றேன் - லைன் கிடைக்க வில்லை!
'அவளுக்கு'? - 'அவள்' என்றால் 'ஸ்வீட் சிக்ஸ்டீன்'.. ரகம்தானே?
அப்படித்தான் நினைக்கிறேன்!
சொல்லிட் டீங்களே - ஜமாய்த்து விடுகிறேன்! உங்களுடைய
ஃப்ளாட் சாவியை கொடுத்துவிட்டு நிம்மதியாக போய் வாருங்கள்..!
விபரம் கேட்டு வை.. போதும்! கேஸை நீயே ஆராயப் புகுந்து விடாதே!


சற்றைக்கெல்லாம் -
இன்றைக்கு நான் வர முடியாது கண்ணே..! இங்கிருக்கும் துப்பறியும் ஜோடி ஒரு பெரிய்ய கேஸை துப்பறிய என்னையும் தங்களோடு சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்!
நிச்சயம் வருவேன் என்று சத்தியம் பண்ணினீர்களே.
வாஸ்தவம்தான் ..! ஆனால் ஒன்றை நீ நினைத்துப் பார்க்க வேண்டும்.. உன் வருங்கால கணவன் ஒரு பிரபல டிடெக்டிவாக உருவானால் உனக்கும் அதில் பெருமைதானே?
அப்படீங்கிறீங்க..! சரி..! பின்னர் ஓய்வு கிடைக்கும் போது வாருங்கள்!
நன்றி... டார்லிங்!
போனில் பேசும் போது இது என்ன தமாஷ்?
ஹே?
ஓ! சும்மா கண்ணுக்கு பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தேன்!
மிஸ்டர் பெய்லி - நீங்கள்தானே?
மிஸ்டர் பெய்லி ஒரு அவசர வேலையாக வெளியிலே போயிருக்கிறார் - என்னை இங்கே இருக்கச் சொல்லி விட்டு! ம்ம்... அவருக்கு போன் பண்ணிய அழகி நீங்கள் தானே?
ஆமாம்.. என் பெயர் கேன்டி கார்வர்!


என் பெயர் கூக்கி! நான் மிஸ்டர் பெய்லியோட அசிஸ்டண்ட் சரி... உங்களுடைய பிரச்னை என்ன - சொல்லுங்கள்.
வந்து... நீங்க - ம்ம்.. சின்ன உறுத்தல்!
சின்ன உறுத்தலா..! அதற்காகவா பிரபல டிடெக்டிவை தேடி இங்கே வந்தீர்கள்!
அதில் மிஸ்டர்.. உங்களைப் பார்த்தால் துப்பறிகிற ஆளா தெரிய வில்லையே என்றுதான் -
ஹா..ஹா.. இந்த தொழிலுக்கு அப்படி ஒரு அப்பாவி தோற்றம்தான் வெற்றிக்கான மூலதனம்..! ஒரு பயல் சந்தேகப்படமாட்டான். இஷ்டத்துக்கு உள்ளே ஊடுருவி காரியத்தை சாதித்துக் கொள்ளலாம்! சரி - உங்களுடைய பிரச்னைக்கு வருவோம்... விபரமாக சொல்லுங்கள்!
ஸாண்டா மோனிகாவில் ஒரு கலைப் பொருள் அங்காடி வைத்திருக்கிறேன்.. சிலைகளும் ஓவியங்களும் கிடைக்கும்.. என் கடைக்கு வாடிக்கையாக வந்து போகும் ஒரு மூதாட்டி திடீரென்று இறந்து போனாள் - தான் சேகரித்து வைத்திருந்த கலைப் பொருட்களுக்கு என்னை வாரிசாக்கிவிட்டு!
உங்கள் மீது அத்தனை அபிமானம் போலிருக்கிறது!
பிரபல ஜப்பானிய ஓவியர் குயியாகி வரைந்த அசல் ஓவியம் அவற்றில் ஒன்று! ஐம்பதினாயிரம் டாலர்கள் பெறுமானமுடையது.
அது என் கைக்கு வந்ததும், ஏகப் பட்ட போட்டி அதை விலைக்கு வாங்கிக் கொள்ள!
ஏதேதோ சொல்கிறீர்கள் - உங்கள் பிரச்னை என்னவென்று சொல்வதை விட்டுவிட்டு!



அந்த கிழவி விட்டுச் சென்று கலைப் பொருள்களை விற்று கொள்ளை கொள்ளையாக பணம் சேர்க்கப் போகிறீர்கள் - இதில் எங்களுடைய தலை யீட்டுக்கு என்ன அவசியம் வந்தது என்றுதான் எனக்கு விளங்கவில்லை.
எனக்கு அச்சுறுத் தல்கள் வந்து கொண்டிருக் கின்றன...
வாட்..? பணம் பறிக்க எவனாவது மிரட்டுகிறானா என்ன?
பத்து முறை போன் வந்து விட்டது.. குயிலாகியின் அந்த ஓவியம் சபிக்கப் பட்டதொன்றாம்... அதை வைத்திருப்பவர்களுக்கு விரைவிலேயே மரணம் சம்பவிக்குமாம்!
வாடிக்கையான கதைதான்... இப்படிச் சொல்லி குறைந்த விலைக்கு அதை தட்டிச் செல்லும் தந்திரம் - வேறென்ன?
ஆனால்... நேற்றிரவு தோட்டா ஒன்று என்னை உரசாத குறை யாக சீறிக் கொண்டு சென்றது!
போலீஸில் புகார் செய்தீர்களா இல்லையா?
யோசித்துப் பார்த்தேன்... ஆதாரம் இல்லாமல் அவர்கள் தான் என்ன செய்ய முடியும் - எனக்கு என்ன செய்வ தென்றே தெரியவில்லை.
ஒரே குழப்பமாக இருக்கிறது! நீங்கள்தான் எனக்கு உதவ வேண்டும்.. அதிர்ஷ்டம் இருந்தால் இன்றைக்கே அந்தப் பிரச்னைக்கு முற்றுப் புள்ளி வைத்து விடலாம்!
இன்றைக்கேவா? அதெப்படி - ?
லாரல் எஸ்டேட் உள்ள ஒரு பிரபல கலைப் பொருள் சேகரிப்பாளருக்கு விற்க இதை நான் அங்கே எடுத்துச் செல்ல விருக்கிறேன்.. என்ற போதிலும் மனதில் சஞ்சலம் இருக்கிறது.
துணைக்கு நம்பகமான ஒரு ஆள் வேண்டும் - அப்படித்தானே மிஸ்?


அந்த அச்சுறுத்தல்கள் இல்லையெனில் குயியாகியின் ஓவியத்தை நான் இப்படி அவசரப்பட்டு விற்க அவசியமேயில்லை.
உடனடியாக அதை யாருக்காவது தள்ளிவிட்டு விட வேண்டும் - அப்போது தான் நான் நிம்மதியாக இருக்க முடியும்!
STUART E
PRIVATE IN
உங்களுடைய பயம் நியாயமானது - கிளம்புங்கள் போவோம்.
பீஸ் எவ்வளவு என்று நீங்கள் சொல்ல வில்லையே!
அப்புறமாக அதைப் பற்றி பேசிக் கொள்வோம்..!
என்னுடைய கார் பின்னால் நிற்கிறது... நீங்கள் முன்னால் செல்லுங்கள் - நான் பின்னாலேயே வருகிறேன்.
ஆல் ரைட் மிஸ்டர் கூக்கி! ஓவியம் என் கடையில் இருக்கிறது!
அந்தப் பெண்ணின் காரின் பின்னாலேயே தன் காரை செலுத்திக் கொண்டு சென்றான் கூக்கி..
இம்மாதிரி பிசாத்து கேஸை கவனிக்க வேண்டிய சிரமத்தை அவருக்கு விட்டு வைக்காமல் நானே ஏற்றுக் கொண்டதற்காக பெய்லி நிச்சயம் எனக்கு நன்றி சொல்வார்.
சற்றைக்கெல்லாம் வீச் அருகே ஒரு குறுகலான தெருவில்..
வித்தியாசமான இடம்..!
TO LET
ESPRESSO
JUICE BAR
candy's ART SHOP


மாடர்ன் ஆர்ட் இது மிஸ்டர் கூக்கி! இதை ரசிக்க வேண்டுமானால்
முதலில் இதை புரிந்து கொள்ளும் கண்ணோட்டம் வேண்டும்!
அந்த ரசனை எல்லாம் என்னிடம் கிடையாது மிஸ்..
இது ஓர் அருமை யான ஓவியம் என்று நீங்கள் சொன்னால் நான் அதை மறுக்கப் போவதில்லை.
நீங்களும் என் வண்டியிலேயே ஏறிக் கொள்ளுங்கள்.. அப்போது தான் பத்திரமாக உங்களை பார்த்துக் கொள்ள ஏதுவாக இருக்கும்...
சற்றைக்கெல்லாம் அவர்கள் லாரல் எஸ்டேட்டை நெருங்கி விட்டார்கள்.
அதோ தெரிகிறதே பிரம்மாண்டமான கட்டிடம் - அந்த இடம்தான்.
அடேயப்பா.. திகில் கதைகளில் வரும் பாழடைந்த கோட்டை மாதிரி அல்லவோ காட்சியளிக்கிறது!
இது மிஸ்டர் டேவிட்ஸனின் வீடு... ஜப்பானிய கலைப் பொருள்கள் மீது அவருக்கு அலாதி யான அபிமானம்.
பார்த்தால் டிராகுலா கோட்டை மாதிரி இருக்கிறதே!
நான் - கேன்டி கார்வர்.. மிஸ்டர் டேவிட்ஸனை பார்க்க வந்திருக்கிறேன்.
வாருங்கள்.. உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறார்


மிஸ் கார்வர்.. வாருங்கள் - நான்.. டேவிட்ஸன்!
வணக்கம்! இவர் என் நண்பர் மிஸ்டர் கூக்கி!
ஓ.. இந்த படத்துக்கு இப்படியொரு முன்னெச்சரிக்கை அவசியம்தான்!
இந்தப் படத்தின் மீது பலருக்கும் ஒரு கண் - அதனால்தான்!
சூப்பர்..! நான் இம் மாதிரி ஒன்றைத் தான் கிடைக்காதா என்று தேடித்தேடி அலைந்து கொண்டி ருந்தேன்!
ஒரு சின்ன சந்தேகம்.. இந்தப் படம் சம்பந்தமாக பேசப் பட்டுவரும் மூடநம்பிக்கை பற்றி நீங்கள் அக்கறை கொள்ளவில்லையா?
அதாவது டாட்கு - கிமியின் சாபத்தை குறிப்பிடு கிறீர்களா?
யாரது டாட்கு - கிமி? உங்கள் பாட்டியா?
இந்தப் படம் முதன் முதலில் அவரிடம்தான் இருந்தது. அவரிடமிருந்து இது திருடப் பட்ட போது அவர் ஒரு சாபம் இட்டார்.. அதன் பின் இந்தப் படத்தை வைத்திருப்பவர் எவராயினும் அவர்களுக்கு துரதிர்ஷ்டம் சம்பவிக்கும் என்றொரு நம்பிக்கை நிலவி வருகிறது.
அது நிஜமோ பொய்யோ நான் விற்று விடுவது என்ற தீர்மானத்திற்கு வந்து விட்டேன்.
அப்படியானால்.. விலை பற்றி பேரம் பேசத் தொடங்கு வோமா?


நீங்களே ஒரு விலை கேளுங்கள்!
இருபதினாயிரம் டாலர்கள்!
அநியாயமாக இருக்கிறதே.. ஐம்பதினாயிரம் பெறும் என்று சொன்னார்களே!
இம்மாதிரியான கலைப் பொருட்களுக்கு விலை நிர்ணயிக்கப் படுவது அவரவர் ரசனையை பொறுத்தது மிஸ்டர்.. என்னைப் பொறுத்தவரை இது இருபதினாயிரம்தான் பெறும்!
முப்பதினாயிரம் அநியாய மாக கொள்ளை போய்விடும் போலிருக்கிறது மிஸ்..! இந்த அடிமட்ட விலைக்கு விற்க வேண்டுமா என்ன - யோசியுங்கள்.
விற்றுத் தொலைத்துவிட தீர்மானித்து விட்டேன்.. இதை வைத்துக் கொண்டிருந்தால் என்னென்ன துரதிர்ஷ்டமெல்லாம் வந்து சேருமோ?
போய் பணத்தை எடுத்து வருகிறேன்!
உனக்கு வந்த மிரட்டல்களுக்கும் இந்த பேரத்திற்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிற மாதிரி உறுத்துகிறது மிஸ்..
பணத்தை பெற்றுக் கொண்டு படத்தை கொடுத்து விட்டு பத்திரமாக வீடு
போய்ச் சென்று விட்டால் மொத்த விவகாரத்தையும் அப்படியே மறந்து விடலாமே!
ஏன் இங்கே எல்லா வற்றையும் மூடிப் போட்டு வைத்திருக்கிறார்கள்?



செய்தித்தாள்..!
மிஸ்.. நான் சந்தேகப்பட்டது சரியாகி விட்டது.
மிஸ்டர் ஸி. எல். டேவிட்ஸனின் ஜப்பானிய சற்றுப்பயணம்
நம்மோடு பேசிய நபர் டேவிட்ஸனே அல்ல!
ஆமாம்.. டேவிட்ஸனின் வீட்டை வசப்படுத்திக் கொண்டு நமக்கு நாமத்தை சாத்த சூழ்ச்சித் திட்டம் வகுத்திருக்கிறான்.
இப்போது நாம் என்ன செய்வது?
ஒரே ஓட்டமாக வெளியே ஓடிப் போய் போலீஸுக்கு தகவல் கொடுப்போம்.
உன்னை போனில் மிரட்டியவன் இவனாகத் தானிருக்கும்! படத்தை மிகக்குறைந்த விலைக்கு நீ விற்க அப்படியொரு சதித்திட்டம்!
என் திட்டத்தை நீ சரியாக யூகித்து விட்டது உன் துரதிர்ஷ்டம் தம்பி!
ஓவ்வ்!
இனி எவ்வளவு பணம் கொடுத்து அந்தப் படத்தை நான் பெறுவது என்ற கேள்விக்கே இடமில்லை!
துப்பாக்கியை கையில் எடுத்து விட்டால் அது இலவசமாகவே வேண்டும் எனக்கு!
உன் அடாவடித்தனம் செல்லு படியாகாது!



இவர்கள் இருவரையும் உச்சி மாடி அறையில் போட்டு அடைத்து வை ப்ராங்க்.. நாம் இங்கே இனியும் இருந்தால் வில்லங்கமாகிவிடும்...
நீங்கள் இப்போதே கிளம்பி விட்டீர்களா?
பாலத்தின் அருகே புதிதாக அமைக்கப்பட்டு வரும் சாலையின் முனையில் ஸாண்டர்ஸை நான் சந்திப்பதாக ஏற்பாடு.. அங்கே நாங்கள் உனக்காக காத்துக் கொண்டிருப்போம்!
ஓ.கே. மிஸ்டர் ப்ராண்டன்!
இந்த நெருக்கடியை சமயோசிதமாக சமாளிக்க உங்களுக்கு ஏதாவது ஒரு உபாயம் தெரிந்திருக்குமே மிஸ்டர் கூக்கி..
ஓ.. ஷ்யூர்! பணிந்து போகிற மாதிரி நாடகமாடி உரிய தருணம் வாய்க்கும்போது கபால்னு பாய்ந்து காரியத்தை முடித்து விடுவேன்!
ம்ம்.. இருவரும் உள்ளே போங்கள்!
நான் இக்கணமே செயல் பட்டாக வேண்டும் - இல்லை யேல் இங்கேயே சமாதிதான்!
அருகே சுவரில் தொங்கிக் கொண்டிருந்த போர்வாள் கூக்கியின் பார்வையில் பட்டது...
எத்தனை சினிமா பார்த்திருக்கிறாய்.. வாளை எப்படி வீச வேண்டும் என்று உனக்கா தெரியாது:...
ஊப்ப்..
அதையேன் கையில் வைத்துக் கொண்டு கஷ்டப் படுகிறாய் - தூர எறி!
டிங்!


இனி நாங்கள் சொல்வதை நீ கேட்டால்தான் பிழைத்தாய்.
உள்ளே போட்டு பூட்டியாயிற்று..! எப்படி என்னோட சாமர்த்தியம்!
இருவரும் தடதடவென்று கீழே இறங்கி முகப்பு வாசலுக்கு ஓடி வந்த போது..
அடடே... கிளம்பி போய்விட்டானே!
உன்னை இங்கேயே விட்டுச் செல்ல வேண்டிய நெருக்கடி!
மிஸ்டர் பெய்லிக்கு போன் செய்! இங்கே வந்து உன்னை ஏற்றிக் கொண்டு பாலம் இருக்கும் பகுதிக்கு விரைந்து வந்து சேரச் சொல்! கூடவே போலீஸையும் அழைத்துக் கொண்டு வந்தால் நல்லது.
ஆனால் மிஸ்டர் கூக்கி.. நீங்கள் தனியாக அவனை பின் தொடர்ந்து செல்வது ஆபத் தில்லையோ?


அதையடுத்து -
கேன்டி கார்வர்?
ஆமாம்.. மிஸ்டர் பெய்லி! நாம் உடனடியாக விரைய வேண்டும்!
கூக்கி ஏன் இந்த விவகாரத்தில் காலை விட்டுக் கொண்டு திண்டாடுகிறான் என்றுதான் எனக்கு விளங்கவில்லை. உன்னிடமிருந்து தகவல்களை சேகரித்து வைக்க மட்டுமே சொல்லியிருந்தேன் அவனிடம்!
எது உசிதம் என்று அவருக்குத் தோன்றியதோ அதை அவர் செய்திருக்கிறார்.. என்ன இருந்தாலும் அவர் உங்களுடைய கூட்டாளி அல்லவா?
அவன் என்னுடைய - என்ன சொன்னாய்?
ஓ..! பார்க்கிங் மைதான பொறுப்பாளன் என்று ஊராருக்கு காட்டிக் கொண்டு அவர் இரகசியமாக உளவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் உண்மை எனக்கு தெரியும்.. பயப்படாதீர்கள் - நான் அந்த இரகசியத்தை யாரிடமும் வெளியிட மாட்டேன்!
அப்படியா சொன்னான்? இருக்கட்டும். பிறகு பேசிக் கொள்கிறேன்! ஆனால் இப்போது எதிரிகள் பிறர் அறியா வண்ணம் அவனை சவக் குழிக்கு அனுப்பிவிடும் அபாயத்தை உருவாக்கிக் கொண்டுவிட்டானே!
பாலம் அருகே..
அதோ நிற்கிறது அவன் ஓட்டி வந்த கார்.. நான் இங்கேயே காரை நிறுத்திக் கொண்டு பெய்லி வரும் வரை காத்திருப்பதுதான் விவேகம்!
END FREEWAY
DETOUR


முன்னால் இருந்த காரில் -
ப்ராங்க் ஏன் இன்னமும் வந்து சேரவில்லை? தாமதத்திற்கு ஒரு காரணமும் இருக்க முடியாதே!
ஏதாவது சங்கடத்தில் மாட்டிக் கொண்டு விட்டானோ?
பின்னால் நிற்கிற காரை கவனி!
எங்கோ தவறு நேர்ந்திருக்கிறது!
அந்தப் பெண்ணோடு வந்த பொடியனின் கார்தான் அது - சந்தேகமேயில்லை!
வீணாக கலவர மடைகிறாய் என்று நினைக்கிறேன் பிரான்டன்
எதற்கும் அருகில் போய் பார்த்து விடுவது நல்லது.
அந்தச் சனியன் எதற்காக என்னிடம் வருகிறானோ தெரிய வில்லையே.. தெய்வமே!
கூக்கி காரைச் செலத்தி தப்பியோட தீர்மானித்தபோது -


அவனேதான்!
ஊஹூம் அகப்பட்டுக் கொண்டு விடலாகாது!
இரண்டு நபர்கள் கூக்கியை துரத்திக் கொண்டு வந்த னர்
அவனை எப்படி யாவது விரட்டிப் பிடித்துவிட வேண்டும்
ஓடித் தப்ப முடியாது என்ற நிலை...
இதன் உள்ளே பதுங்கிக் கொண்டு விட்டால் தப்பி விடலாம்.
மிஸ்டர் பெய்லி! வகையாக மாட்டிக் கொண்டு விழிக்கிறேன்! வந்து காப்பாற்றுங்கள்... சீக்கிரம்!
இங்கேதான் இருந்தான்.. அந்த குழாய்களுக்குள்ளே போய் தேடு!
ஓ.கே!


அப்போது -
அதோ... கூக்கியின் கார்!
யாரோ அவனை வழி மறித்திருக் கிறார்கள்.
நீ இங்கேயே இரு கேன்டி! நான் போய் அவனை தேடு கிறேன்! போலீஸார் இங்கே வந்து சேர்ந்தால் நிலவரத்தை அவர்களிடம் சொல்.
பெய்லி சரிவில் இறங்கினார்...
இவன் யார் குறுக்கே வருகிறது?
வா... இங்கிருந்து போய்விடுவோம்!
டுமீல்
டுமீல்
டுமீல்!
வெளியே ஒரு யுத்தமே நடக்கிற மாதிரி தோன்றுகிறது!


ஓ.. எங்கே ஓடு கிறாய் - ரொம்ப அவசரமோ?
துப்பாக்கியை தூர எறி!
கும்!
கூக்கி.. உனக்கு ஆபத்தில்லை யே?
வந்து பாருங்கள் - புரியும்! எங்கே போய்த் தொலைந்தான் இன்னொருத்தன்?
அதோ ஓடுகிறான்!
அவனையும் மடக்க வேண்டும்!
இருவரும் தப்பியோடும் கயவனை துரத்திச் சென்றார்கள்.
சரமாரியாக சுடுகிறானே - எப்படி நெருங்குவது?
குமீஞ்!


ப்ராண்டன் மேலே சாலைக்கு வந்து சேர்ந்தபோது போலீஸாரும் அதே கணத்தில் அங்கே வந்து சேர்ந்தனர்.
போலீஸ்!
அவன் திரும்பி ஓட யத்தனித்த போது -
ணாங்!
தூள் கிளப்பி விட்டாய்.. கூக்கி!
அதுசரி.. என் தலை எங்கே போச்சு?
கூக்கி.. படு சமர்த்து! அட்டகாசம் பண்ணிவிட்டீர்கள் என் படத்தை மீட்டதோடு, எதிரிகளையும் பிடித்துக் கொடுத்து விட்டீர்கள்!
இதெல்லாம் என் போன்ற உளவாளிகளுக்கு சர்வ சாதாரணம் மிஸ்!
பின்னர் -
அடுத்த தடவை இம்மாதிரி சந்தர்ப்பங்களில் உளவறியும் வேலையை நீ எங்களிடம் விட்டு விட்டு ஒதுங்கிக் கொள்ள வேண்டும்.. கூக்கி!
இந்த வழக்கிற்கு கிடைத்த ஊதியம் என்ன என்று பாருங்கள் ஸார் - பணம் இல்லை!
கேண்டி ஊதியமாக கொடுத்த இந்தப் படம் இருக்கிறதே - இதன் பெருமைக்கு ஈடு இணையே கிடையாது ஸார்.. உங்களுக்கு இது புரியுமோ என்னவோ?
கோளாறு உன் வயதில் இருக்கிறதடா.. ராஸ்கல்!
முற்றும்.



லயன்-ஸ்பாட்-லைட்!
கதை & சித்திரம்
R. இன்பரசன்
4/40. குருக்கள் காலனி
சின்ன திருப்பதி
சேலம்_ 636 008.
விச்சு & கிச்சு
ஐயாவோட 'பர்ச்சேசிங்' ஐப் பற்றி என்ன நினைக்கிறாய் விச்சு?
தேவலே! ஆனால் ஷூதான் சரியில்லை!
SPORTS
என்னை எப்போதும் மட்டம் தட்டுவதே உனக்கு வேலை!
பின்னர்...
ஆவ்! நல்ல தூக்கம்! விச்சு நேரமாச்சு கிளம்புவோம்
நான் எப்போதோ 'ரெடி' கிச்சு!
இதோ வந்திட்டேன்!
'ஷூ'தான் கொஞ்சம் லூஸ்
எதையோ மறந்தாப்ல தோணுது
'கோச்' வேறு தாமதத்திற்கு கோபித்துக் கொள்வார்!
புலம்பாமல் சீக்கிரம் வா! கிச்சு


ஒரு வழியாக வந்து சேர்ந்து விட்டோம்
ஐபாவின் 'ஜாவலின்' ஐப் பார்த்து அசரப் போகிறாய்!
முதலில் 'ஜாகிங்'
ஒவ்! ஒரு ஷூவில் 'லேஸ்' இல்லை
அது கூடத் தெரியாத அளவிற்கு உன் ஷூ பெரிதாக இருக்கிறது!
இதற்காக நான் பின் வாங்கப் போற தில்லை
அலட்சியம் வேண்டாம் கிச்சு! என்னுடையதை இரவல் தருகிறேன்
ஏன்யா கத்தறே!
சீக்கிரம் வந்து தொலையுங்கள்!
கிச்சு! நீ முதலில் பயிற்சியைத் துவங்கு
இந்தா கிச்சு
அவசியமில்லை நான் யார் என்று காட்டுகிறேன்
ஜாக்கிரதை கிச்சு!
அதோ அந்தக் கோட்டிற்கு முன்னாலிருந்து வீசு!


சொல்லப் போனால் எனக்கு யாருடைய உதவியும் தேவை யில்லை!நானொரு பிறவிக் கலைஞன ாக்கும்
இப்படி தலை சிறந்த ஆட்டக்காரரைப் போன்று அடி வைத்துப் பாய்ந்து...
பட்!
ஆவ்! ஐயோ! ஷூ தடுக்கி விட்டு விட்டதே!
ஐயோ! அம்மாடி!
சர்ர்ர்....
அடி மடையனே! என் தலைக்கே குறி வைக்கிறாயா! தொலைத் தேன் உன்னை!
சதக்
விர்ர்ர்
விச்சு என்ன இப்படி செய்து விட்டாய் ?
பின்னர்
'கோச்' உன்னை கிரவுண்டைச் சுத்தி 24 ரவுண்டு அடிக்கச் சொல்லி விட்டார். வீங்கிய உன் காலுக்கு நீ வாங்கிய ஷூ பொருத்தம்தானே?
MY ENEMY I
முற்றும்

# புக் - மார்க்கெட்

## விற்பனைக்கு

லயன்

1. சதுரங்க வெறியன்
2. லயன் ஹாலி டே ஸ்பெஷல்
3. மரணத்தின் நிழலில்
4. மர்ம முகமூடி

திகில்

5. சைத்தான் சாம்ராஜ்யம்
6. சிரிக்கும் மரணம்
7. இரத்தப் படலம் IV

மினி லயன்

8. காமெடி கர்னல்
9. சூப்பர் சர்க்கஸ்
10. கொலைகாரக் காதலி

## தேவை

1. யார் அந்த மினி ஸ்பைடர்?
2. யார் அந்த ஜூனியர் ஆர்ச்சி?
3. அதிசயத் தீவில் ஆர்ச்சி!
4. நீதிக் காவலன் ஸ்பைடர்
5. தீபாவளி மலர் '87
6. மரண ராகம்

**வாங்க-விற்க-தொடர்பு கொள்க**

E. R. காண்டீப சுந்தரம்
34, இளங்கோ இல்லம்,
செல்லாண்டியம்மன் தெரு,
சிங்காநல்லூர், கோவை - 5.

## தேவை

1. தலைவாங்கிக் குரங்கு
2. ஆர்ச்சிக்கோர் ஆர்ச்சி
3. புரட்சித் தலைவன் ஆர்ச்சி
4. உலகப் போரில் ஆர்ச்சி
5. மிஸ்டர் ஜெட்
6. சாகஸத் தலைவி

மினி லயன்

7. புரட்சித் தீ
8. நடுக்கடலில் எலிகள்

**தொடர்பு கொள்க:**

R. V. உமா சங்கர்,
140-A, காந்தி ரோடு,
ஸ்ரீபெரும்புதூர் - 602 105.

## விற்பனைக்கு

லயன்

1. மின்னலோடு மோதல்
2. பாதாளப் போராட்டம்
3. மர்மக் கோவில்

திகில்

4. சைத்தான் துறைமுகம்
5. BATMAN கிறுக்கனா?

மினி லயன்

6. புரட்சித் தீ

**தொடர்பு கொள்க:**

S. S. கார்த்திக்,
Plot No. 1151, ராஜகோபாலபுரம்
ஹவுசிங் யூனிட்,
பெரியார் நகர், புதுக்கோட்டை - 3.


அடுத்த வெளியீடு!
அட்டகாசமாய் வருகிறது!
மரண மண்டலம்!
மின்னல் படையினரின் ஆக்ஷன் திரில்லர்!
லயன் காமிக்ஸ்
விலை ரூ. 5/-

வெகு விரைவில் எதிர்பாருங்கள்...!

ஏஜெண்ட் XIII ன்

# இரத்தப் படலம்

பாகம் V & VI







காமிக்ஸ்
வரலாற்றில்
சாதனை படைத்துவரும்
சித்திரத் தொடர்
இது!

உங்களை மெய்மறக்கச் செய்ய வருகின்றது!




உங்களால் முடியுமா? சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதுங்கள்!


முத்து ஆட்டோமாட்டிக்
போட்டோ காப்பியர்ஸ்,
முத்து நாவல் பண்ணை,
நாமக்கல்-637 001.